முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 6-1-59 வெள்ளி | ஒலி 28

'தூங்காதே, தம்பி, தூங்காதே!'

" தீபாவளியன்று, தான் கலந்து கொள்ளப் போகும் கூட்டத்தையும் மறந்து [illegible] ண்டிக் கொடு மெய் மறந்து தூங்கிவிட்டார் " (செய்தி)

ஓடிவிட்டார்கள் வெளியே! உதறிவிட்டார்கள் கண்ணியத்தை!

சென்னை நகராட்சி மன்றத்திலே நம் தோழர் அரசு அவர்கள் மேயராக வீற்றிருந்தார், ஆறு மாத காலம்! பிறர் பொருமையால், பொச்சரிப்பால் புழுங்கிச் சாகிற அளவிற்கு நாட்டு மக்கள் அவருக்கு வாழ்த்தும், வரவேற்பும் தந்தார்கள். ஏன்?

நம் கட்சிக்காரர் என்பதற்கு மட்டுமல்ல; மேயர் பதவிக்கு 'நம்மைப் போன்றவருக்கும் கிடைத்திருக்கிறது' என்ற பூரிப்பால்தான் அரசு அவர்களைக் கொண்டாடினார்கள்.

மேயர் பதவியிலிருந்தவர்களின் வரலாற்றைப் படிக்கிறோம்! மேல் நாடு சென்று திரும்பி வந்து வேலையற்றிருந்தவர்கள், நரை தட்டும்வரை புத்தகத்தை ஏந்தி மாணவராக உலவிய உல்லாசிகள், தரையை மிதித்தறியாத தனவந்தர்கள், சீமான்கள், சீமாட்டிகள், பணத்தால் உயர்ந்தோர், ஆள் பலத்தால் உயர்ந்தோர், குலத்தால் உயர்ந்தோர் இப்பேர்ப்பட்டவர்களைத்தான் 'மேயர் நாற்காலி' தாங்கிப் பழக்கப்பட்டிருந்தது. ஆனால், 'சாமான்யர்' ஒருவர் இதுவரை அந்தப் பதவியில் அமர்ந்ததுமில்லை; அவரைக் கொண்டாடி மக்கள் இவ்வளவு புளகாங்கிதம் அடையவுமில்லை.

நம் அரசு, அரசுக்கட்டிலில் அமர்ந்த காலம் மிகக் குறுகிய காலம். அந்த ஆறு மாத காலத்தில் நாட்டு மக்களுக்குத் தன்னாலியன்றதைச் செய்தார்.

துண்டு விழுந்து, கடன் பட்ட நிலையிலிருந்த சென்னை நகராட்சி மனறத்தின் வருவாயை உயர்த்தி உபரி காட்டும் நிதி நிலையை உண்டாக்கினார். காலியாயிருந்த நகராட்சி மன்றக் கருவூலம், நம்மவர் கை பட்டவுடன நிரம்பி வழிந்தது!

பணக்காரர்கள் என்றால் தனிச் சலுகை, பாதையோரத்து ஏழை என்றால் 'சிடுசிடுப்பு' — என்கிற நிலை மாறிற்று. பணக்காரரின் வீடுகளுக்கு, மன்றங்களுக்கு, அவர்கள் உட்கார்ந்து காலம் போக்குகிற ஓட்டல்களுக்கு வரி அதிகமாக்கப்பட்டது.

கருத்துத் தெரிவிக்க விரும்புவோர் வசதிக்குக் கருத்தறிவிக்கும் பெட்டி வைத்தார், மேயர்! நகரத்து மக்களின் குறையை அறிந்து கொள்ளும் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

இத்தனை நல்ல செயல்களையும், அவர் பெரும்பான்மையான நகராட்சி மன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் செய்தார். தான் செய்தது—எனும் பெருமை கொண்டாடாது பணி புரிந்தார். [illegible]ரி ஒழிப்பு, ஆந்திரத்திலிருந்து நீர் கொண்டுவருதல் போன்ற தேவையான பெருந்திட்டங்களுக்கு அடிக்கல் முயற்சி இட்டார். அடுத்து வரும் மேயர்களுக்கு வளமான ஒரு பாதை வகுத்துத் தந்தார்.

இத்தனை பணி புரிந்து, கடுகத்தனை கர்வமும் இல்லாது பழகிய மேயரைத் தேர்ந்தெடுத்தது பற்றிக் கழகம் பெருமை கொள்கிறது.

தவழும் புன்னகை, சரளமாகப் பழகும் தன்மை இவைகளைப் பதவி காரணமாக இழக்கவில்லை அரசு அவர்கள். நண்பர் நாணுமளவிற்கு அவர் அ. பொ. அரசாகத்தான் எப்போதும் பழகினார்! கழகம் வளர்த்திருக்கிற இந்த நற்பண்பை அவர் கடைப்பிடித்தார். கழகத்தின் நல்ல பிரதிநிதியாக நகராட்சி மன்றத்தில் விளங்கினார்.

மேயரின் நற்குணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவரும், அவரது பணிகளில் துணை நின்றவருமான துணை மேயர் சிவசங்கரன் கழகத்தின் கண்ணியத்தை நகராட்சி மன்றத்தில் நிலை நிறுத்தியவராவார்.

இத்தகு நல்லவர்கள் அண்மையில் பதவி விலக இருக்கிறார்கள். அவர்களைப் பாராட்டிட வேண்டிய நகராட்சி மன்றக் கூட்டத்திலே ஒரு அசம்பாவிதம் நடந்துவிட்டது. காங்கிரஸ்காரர்கள் நடத்திய அவலச் செயல் கேட்டு நாடே வருத்தத்தில் ஆழ்ந்தது. அன்று நடந்த நிகழ்ச்சி என்ன?

பதவிக் காலம் முடிந்து பதவி விலகப் போகும் மேயர், துணை மேயருக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது, நகராட்சி மன்றக் கூட்டத்தில்!

தீர்மானம் முன்மொழிந்து, பின்னர் வழிமொழியப்படுவதற்கு முன்பே நகராட்சி மன்றத்தில் காங்கிரஸ் தலைவராக வீற்றிருக்கும் டாக்டர் சீனிவாசன் எழுந்தார். தாம் பேச விரும்புவதாக அறிவித்தார். தீர்மானம் முன்மொழிந்து, பின்மொழியப்படும்வரை அவர் பொறுமை காட்டவில்லை! நகர மன்ற ஒழுங்கிற்குப் புறம்பாக நடந்தார்!

பொறுமையின் எல்லை என்றும், புனிதர் என்றும், அகிம்சைக் காவலர் என்றும் யாரை மக்கள் ஏற்றிப் போற்றிப் புகழ்கிறார்களோ, அந்தக் காந்தியாரின் சீடர்கள்தாம் தீர்மானம் படிக்கப்படும் வரை பொறுமை காட்டவில்லை; அவர் கட்சியினர் தாங்கள் ஆத்திரக்காரர்கள், அவசரக்காரர்கள் என்று காட்டிக்கொண்டார்கள்.

எங்களுடைய கட்சியில் ஒழுங்கிருக்கிறது. எங்கள் ஆட்கள்தான் சட்டமன்றங்களில், நகர மன்றங்களில் ஒழுங்காக நடந்துகொள்வார்கள்—என்று வாய்ப்பறை அடித்துத் திரிகிற முரட்டுக் கதராடைக்காரர்களின் நகர மன்ற கட்சித் தலைவர்தான் மன்ற விதியை மீறினார்; ஒழுங்கைச் சிதைத்தார்!

அம்மட்டோ! நகராட்சி மன்றத் தலைவருக்கு நடக்கும் பாராட்டு விழாவில் வெளியேறினார்கள்! இதன்மூலம் தங்கள் வரலாற்று ஏட்டிலே கரியைப் பூசிக் கொண்டார்கள்!

ஏன் வெளியேறினோம்—என்று அவர்கள் விடுத்திருக்கும் அறிக்கையைப் பார்த்தவர்கள் அவர்கள் நெஞ்சங்களிலே குவிந்து கிடக்கும் வஞ்சக எண்ணத்தினைப் புரிந்துகொள்வார்கள்.

“மேயர் சுதந்திர தினத்திலே கலந்துகொள்ளவில்லை. அதுபற்றி விசாரிக்கவுமில்லை! ஆகவே நாங்கள் மேயரைப் பாராட்டும் கூட்டத்தில் வெளிநடப்புச் செய்தோம்!”

—கூறியிருக்கிறார்கள், அறிக்கையில்!

மேயர் சுதந்திர தினத்தில் கலந்துகொள்ள இயலாமைக்கு ஆயிரம் தடவை விளக்கங்கள் தந்தாகிவிட்டது. மீண்டும் குப்பையைக் கிளறி அந்த மேட்டிலே படுத்துப் புரண்டு சுகம் காண நினைக்கிறார்கள்.

'சுதந்திர தினத்திற்கு வர இயலவில்லை'—என்றோம். 'கிடையாது! கிடையாது!! அரசியல் உள் காரணம் இருக்கிறது!' —என்றார்கள் காங்கிரசார். அப்படியே உள் காரணம் இருப்பதாக வாதத்திற்கு ஒத்துக் கொண்டாலும், இவர்கள நம்முடைய பெருந் தன்மையான செயலுக்குப் பாராட்டல்லவா கூற வேண்டும்?

'அரசியல் கொள்கை முரண்பாடு உடையவர்கள் நாங்கள். ஆகவே சுதத்திரதின விழாவில் கலந்துகொள்ளமாட்டோம்' —என்றோ, 'சுத்ந்திர தின விழாவே கிடையாது!'—என்றோ நாம் அறிவிக்கவில்லை. மாறாக, சுதந்திரதின விழாவில் கலந்துகொள்ள இயலவில்லை—என்று அரசியல் நாகரிகத்தோடு கூறிய நமக்கு வாழ்த்தல்லவா கூற வேண்டும் அவர்கள்?

அரசியல் பண்பாட்டைப் பயிலாதவர்களிடமிருந்து எப்படி வாழ்த்தைப் பெறமுடியும்? நல்ல பணியாற்றி, கட்சி வேறுபாடின்றிப் பழகிய மேயர் பாராட்டு விழாவிலே 'வெளிநடப்பு' செய்யும் அரசியல் காட்டுமிராண்டிகளிடமிருந்து எப்படி தன்மையான செயல்களை எதிர்பார்க்க முடியும்?

நல்லவர்களை, நல்ல செயல்களைப் பாராட்டும் தன்மையை இழந்து, ஆணவ நடை போட்டுச் சென்று கொண்டிருக்கிறது காங்கிரஸ்!

ஆனால், கழகமோ நல்லவர்களை, நற்செயல்களை எவர் செய்தாலும் பாராட்டிப் புகழும் அரசியல் பெருந்தன்மையை மென்மேலும் வளர்த்துக்கொண்டிருக்கிறது என்பதை எத்தனையோ நிகழ்ச்சிகள் கூறும்!

அண்மையில் சென்னை நகராட்சி மன்றத்தில் காங்கிரஸ் ஏன் 'அவலச் செயல் புரிந்தது—என்பது நம் கவலை! 'காங்கிரஸ் தன் வாடிக்கையான அவலச் செயல்களை விட்டொழிக்குமா? தரம் குறைந்த செயல்களால் நலிந்துகொண்டிருக்கும் காங்கிரஸ் மற்றவர்களுடன ஒத்துப் போகுமா?'—என்பதே நாட்டு மக்களின் கவலை!

—அடியார்

சட்ட மன்றத்துச் சம்பவம்

சட்டசபையிலே அறிஞர் அண்ணாவின் பேச்சில் குறுக்கிடுவதென்றால் பிற அங்கத்தினர்களுக்கு சொல்லொண்ணா மகிழ்ச்சி.

அண்மையில் அண்ணா அவர்கள் பேசியபோது நிதியமைச்சர் குறுக்கிட்டதும் அண்ணா அதற்குத் தந்த பதிலும் சுவையானவை! அச்சுவை நிகழ்ச்சி இதோ:

அண்ணா: நிதியமைச்சர் அவர்கள் “நீங்கள் மாற்றிக் கொள்ளத்தக்க திருத்தங்களை மட்டும் சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன்”—என்று சொன்னார்கள். 'இவர்கள் எங்கே மாற்றிக் கொள்ளத்தக்க அளவுக்குத் திருத்தங்களைச் சொல்லப்போகிறார்கள். ஏதாவது மேலெழுந்தவாரியாகச் சொல்வார்கள். அதற்கு ஏதாவது சாமர்த்தியமாக மூன்று நான்கு வாதங்களைச் சொன்னால் சரியாகப் போய்விடும்” என்று அவர்கள் சாமர்த்தியத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறார்களே தவிர இதயத்தில் நம்பிக்கை வைக்கவில்லை.

நிதியமைச்சர்: உங்களுடைய சாமர்த்தியத்திலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கு சாமர்த்தியக்குறைவுஇருப்பதாக நான் பேசவிலலை. (சிரிப்பு)

❊

நிதி நிலை அறிக்கையின் பேரில் பேசும்போது!

அண்ணா: நிதியமைச்சர் அவர்கள் ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து 'இந்தப் புத்தகத்தைப் படியுங்கள். அந்தப் புத்தகத்தைப் படியுங்கள்'—என்று சொல்வதுபோல சொன்னார். நமது நிதியமைச்சர் அவர்கள் கல்லூரிப் பேராசிரியராக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

நிதியமைச்சர்: இந்த வேலை போனாலும் வேறு ஒரு வேலைக்கு வழி காண்பித்துத் தந்ததற்காக மிகவும் நன்றி.

அண்ணா: நிதியமைச்சர் அவர்கட்குப் பேராசிரியர் வேலை தேவையில்லை. அவர்கள் சிறந்த வழக்கறிஞர். கொலை செய்தவரைத் தப்புவிக்க வைப்பார். கொலை செய்யாதவரைக் குற்றவாளியாக்குவார்—அவ்வளவு சிறந்த வழக்கறிஞர். அதில் எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

வெள்ளி 6—11—59 சென்னை

இலங்கை அரசியலில் தி. மு. கழகம்!

கொஞ்சு மொழி பேசும் கிளியைப் பார்த்து பிணங் கோத்தும் கழுகு என்று கூறுவதுபோல் —

அன்னத்தின் தூவியை அண்டங் காக்கையின் சிறகென்று சொல்வதுபோல் —

எழில் ரோஜா மலரை எருக்கம்பூ — என்று இயம்புவது போல் —

இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவின் படுகொலைக்கான சதியில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பங்குண்டு—என்று ஒரு பச்சைப் பொய்யை அந்நாட்டுப் பாராளு மன்றத்திலே தெரிவித்திருக்கிறார் பண்டார நாயகா என்ற பெயர் கொண்ட அங்கத்தினர் ஒருவர்!

இவரும் கொலையுண்ட பிரதமருக்கு உறவினராம். ஒரு வேளை அந்த சோகத்தின் உச்ச கட்டத்தில் இப்படியெல்லாம் உளறியிருப்பாரோ என்றுதான் நாமெல்லாம் கருத வேண்டியிருக்கிறது!

அவர், பண்டாரநாயகாவின் கொலைக்கான சதியில் பங்கெடுத்துக்கொண்டதாகக் கூறும்போது தி. மு. கழகத்தை மட்டுமல்ல, சோவியத் நாட்டை, அமெரிக்க நாட்டை, யூகோஸ்லேவிய நாட்டை முதற்கொண்டு எந்த ஒரு சாராரையும் அவர் பாக்கி வைக்கவில்லை.

குழப்பம் குடிகொண்டிருக்கும் அந்த அங்கத்தினரது பேச்சுக்கு உலக அரங்கம் எந்தவித முக்கியத்துவம் அளிக்காவிட்டாலும் நமது கழகத்தின்மீது பொருத்திக் காட்டப்பட்ட குற்றச்சாட்டிற்குப் பதிலிறுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசியலிலே பலாத்காரம் கூடாது—என்பதிலே உறுதியான நம்பிக்கை வைத்திருப்பவர்கள், நாம்!

தமிழகத்து அரசியலிலே நேர்மையும் அமைதியும் வேறு எந்த மாநிலத்திலும் இருப்பதைவிட அதிகமாக நிலவுகிறதென்றால் அதற்கு மூல காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திலே அவ்வப்போது விதைத்துவரும் பண்பாடுதான்—என்று வருங்கால வரலாற்றாசிரியர்கள் நிச்சயம் எழுதி வைக்கத்தான் போகிறார்கள்.

எண்ணங்களை வெளியிடுபவர்களை அழித்துவிடுவதன் மூலம் எண்ணங்களை அழித்துவிடலாம் என்பது கடைந்தெடுத்த முட்டாள்தனம் மட்டுமல்ல; அது முழுக்க முழுக்க மிருகத்தனம்—என்பதிலே நூற்றுக்கு நூறு நம்பிக்கையுடையவர்கள் இன்று தி. மு. கழகத்தின் அணியிலே லட்சோப லட்சமாகத் திரண்டு நிற்கும் காளையர்கள்!

எதிரிகளின் பாசறையிலே இருக்கும் அத்தகைய இழிதகையாளர்களால் இலங்கை பண்டார நாயகாவை இழந்ததுபோல் நாமும் எத்தனையோ மாணிக்கங்களை இழந்திருக்கிறோம்.

தூக்கிலே தொங்கவிடப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதம்—

படுகொலை செய்யப்பட்ட நெல்லிக்குப்பம் மஜீத் —

மிளகாய்ப் பொடியைக் கண்ணிலே தூவி குத்திக் கொல்லப்பட்ட வண்ணையம்பதி பாண்டியன் —

கொள்கை வைரம் பாய்ந்தவன் என்பதற்காகப் பிணமாக்கப்பட்ட கே. வி. கே. சாமி—

—மாற்றாரின் பலாத்காரக் கொள்கையால் இத்தகைய மாணிக்கங்களை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் நம்மைப்பார்த்துத்தான் உண்மைநிலை யறியாமல் சிறுகுழந்தைபோல உளறிக் கொட்டியிருக்கிறார், அந்த அங்கத்தினர்!

இது குறித்து பொதுச் செயலாளர் அறிக்கை தோழர் பண்டார நாயகாவின் ஐயத்தைப் போக்குமென்று நினைக்கிறோம்:

"இலங்கைப் பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினரான திரு. பண்டாரநாயகா என்பவர், இலங்கை முதலமைச்சராயிருந்த பண்டாரநாயகாவின் கொலைச் சதிக்குத் தென்னக திராவிட முன்னேற்றக் கழகமும் உடந்தையாக இருந்ததாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கும் கூற்றைச் செய்தித் தாள்களில் படித்துத் திடுக்கிட்டுப்போனேன். அந்தக் கூற்று உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட, முழுப் பொறுப்போடு மறுக்கத்தக்க, வன்மையாகக் கண்டிக்கத்தக்க, நடுநிலையாளராலும் நல்லறிவு படைத்தோராலும் வெறுக்கத்தக்க, 'கற்பனை செய்யப்பட்ட வீண்பழியாகும். பொறுப்பு வாய்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உண்மைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கூற்றை எப்படிக் கூறத் துணிந்தார் என்பதுதான் வியப்புக்குரியதாக இருக்கிறது.

"கருத்துவேற்றுமையைக் கத்திமுனையாலோ அல்லது துப்பாக்கிக் குண்டாலோ தீர்த்துக்கொள்ளும் இழிசெயலை, 'அருவருத்தொதுக்கத்தக்க காட்டுமிராண்டியின் கயமைச் செயல்' என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் படுகொலை ஏற்படும்போதெல்லாம் கூறிவருகிறது. தி. மு. கழகம், அறவழியில் நின்று செயலாற்றி வருவதிலேதான் தன் கருத்தினைச் செலுத்திவருகிறது.

"இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை வாழ் தமிழர்களிடையேயும், தென்னகத்திலிருந்து இலங்கைக்குச் சென்றுள்ள தமிழர்களிடையேயும் நல்லுறவு ஏற்படவும், அவர்களின் நல்வாழ்வு தழைக்கவும், அவர்களிடையே பகுத்தறிவு நெறி பரவவும் ஆன அரும்பணிகளைப் புரியும் ஒரு பண்பாட்டு அமைப்பாகத்தான் இருந்து வருகிறது. தென்னக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், பண்பாட்டுத் தொடர்பைத் தவிர வேறு அரசியல் தொடர்பு எதுவுமில்லை. மேலும், இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கை அரசியலில் ஈடுபடுவதில்லை. இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையில் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினரின் கூற்று ஒதுக்கத்தக்கது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்."

— பொதுச் செயலாளரின் இந்த அறிக்கைக்குப் பிறகாவது இலங்கையிலே குழப்பமடைந்திருப்பவர்கள் தெளிவடைவார்கள் என்று நம்புகிறோம்.

எங்கு சொல்லி அழுவது?

1959-ம் ஆண்டின் மூன்றாவது கால்வருடத்தில், தெற்கு ஆசியாவில் பல்வேறு திட்டங்களுக்கு உதவுவதற்காக ராக்பெல்லர் நிறுவனம் 1,39 660 டாலர் வரை மானியம் அளிப்பதாக அறிவித்திருக்கிறது.

இந்தியாவிற்கென அளிக்கப்படும் ஆறு மானியங்களும் வடநாட்டவருக்கே தரப்பட்டிருக்கின்றன.

புதுடில்லியில் உள்ள இந்திய சர்வதேசக் கழகத்திற்கு 1,20 000 டாலர் வழங்கப்பட்டிருக்கிறது.

பீகார் சர்க்கார் அதிகாரியான எஸ். டி, சின்ஹா. அமெரிக்காவில் கார்ன்வால் பல்கலைக் கழகத்தில் படிக்க 9000 டாலர்.

கல்கத்தா இந்திய மொழிக் கழகத்திற்கு 9,000 டாலர்.

புதுடில்லி தேசீய கல்விக் கழகத்தைச் சேர்ந்த கே. ஆர். கிருபளானிக்கு அமெரிக்காவில் படிக்க 1,000 டாலர்.

லக்னோ பல்கலைக் கழகத்திற்கு 3,060 டாலர்.

இப்படி எல்லா மானியங்களும் வடநாட்டவருக்கே தரப்பட்டிருக்கின்றன.

—தென்னகத்தில் மேல்நாடு சென்று படிக்க வேண்டியோர் கிடையாதா?

இங்குள்ள பல்கலைக் கழகங்கள் வளரவேண்டாமா?

—இந்த அநியாயத்தை எங்குதான் சொல்லி அழுவது?

குலைத்துவிடு தமிழகத்தை!
கொடியேற்றிவிடு டில்லியில்!

இங்கிலாந்தைப்போல, பிரான்சைப் போல இந்தியா ஒரு தேசியநாடு என்று அகில இந்தியக் கட்சிகள் அனைத்தும் ஒரு முகமாக கதைத்து வருகின்றன. என்றாலும், இன்றைக்கு இந்திய ஒற்றுமை நீண்டு நிலைத்து நிற்குமா எனக் கவலைப்படுவோர் அக் கட்சிகளிலே நிறைய பேர் உண்டு. இந்திய போலி ஒற்றுமையை, சிதைந்து போகாமல் பாதுகாக்க பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தத் துவங்கியுள்ளனர். இந்தியாவின் ஒற்றுமை நிரந்தரமானது, சில நாடுகளாக இந்தியா சிதைந்து போய்விடும் எனப் பேசுவது பேதமை என்று கூறுவோர்கூட இந்தியாவின் இன்றைய அரசியல் நிலையை, பல்வேறு இன, மொழி மக்களின் மனப்போக்கை அறிந்து வெதும்பத் தலைப்பட்டுள்ளனர். இந்திய ஒற்றுமை கானல் நீராகிவிடுமோ எனக் கலங்கவும் முற்பட்டுள்ளனர்.

1950—ல் பிரகடனப் படுத்தப்பட்ட இந்திய அரசியல் சட்டம் இந்திய ஒற்றுமையை சிதறடிக்காமல் இந்திய தேசியத்தை, இந்தியப் பற்றை மிகவும் உருவாக்கும் என்றே நம்பி வந்தனர். கடந்த பத்தாண்டு கால அனுபவமே இதற்கு முரணாக அமைந்திருப்பதாகவும், இந்திய ஒற்றுமையில் நெருக்கடி, குலைவு ஏற்பட்டுள்ளதாகவும் பெரிய இடத்திலே உள்ளவர்களெல்லாம் இன்றைக்கு மனந் திறந்து கூறத் துவங்கியுள்ளனர். இந்திய ஒற்றுமை, தேசியம் என்பதெல்லாம் முடிந்த முடிவு என்ற பழைய நிலைமைமாறி, அவைகள் பெரும் பிரச்சினையாக, சிக்கலாக இன்றைக்குப் பேசப்படுகின்றன. எனவே, திராவிடம் காணத் துடிப்பவர்கள் கனவு காணவில்லை. மாறாக, இந்திய ஒற்றுமையை நிலையென நம்பியவர்கள்தான் கனவு நிலைமையிலே இருந்தவர்கள் என்ற தெளிவான உண்மை துலங்கத் துவங்கியுள்ளது.

நடைமுறையில் இருந்து வருகின்ற இந்திய அரசியல் சட்டம் கூட்டாட்சி முறையில் வகுக்கப்பட்டிருப்பதால் இந்திய ஒற்றுமை வளர்வதற்கு மாறாக குறைந்து வருகின்றது என்றும், பாரதத்தின் ஒற்றுமை உருக்குலையாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்றால் தற்போதைய கூட்டாட்சி அரசியல் சட்டம் நீக்கப்பட்டு இங்கிலாந்தில் உள்ளதைப்போல ஐக்கிய அரசியல் சட்டம் ஏற்பட வேண்டும் என்றும், அப்போதுதான் பாரதத்தின் ஒற்றுமை வளர்ந்தோங்க வழியுண்டென்றும் இந்தியாவின் தலைமை நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி மேகர் சண்ட் மகாஜன் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் எழுதியுள்ள ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்திய அரசியல் சட்டம் பெயரளவில்தான் கூட்டாட்சி முறையில் இருக்கிறதேயொழிய நடைமுறையில் அது கூட்டாட்சி முறைக்கு ஒத்ததாக இல்லை என்றும், கடந்தகால நடைமுறை அனுபவங்களை வைத்துக் கொண்டு பார்த்தால் இராஜ்ய சர்க்கார்களுக்கு இன்னும் அதிக,

சிலம்பு

உரிய அதிகாரங்கள் அளிக்கின்ற அரசியல் சட்டம் உருவானால்தான இந்தியாவின் ஒற்றுமையைப்பாதுகாக்க இயலும் என்றும் அதே 'இந்து' பத்திரிகையில் ஓர் கட்டுரையில் ஆறு மாதங்களுக்கு முன்னர் முன்னாள் இந்தியதுணை ரயில்வே அமைச்சரும், விந்தியப் பிரதேசத்தின் முன்னாள் லெப்டினன்ட் கவர்னரும், இரண்டாவது நிதிக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய வருமான சந்தானம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

இந்திய ஒற்றுமையை பாதுகாத்துப் போன இரண்டு முரண்பட்ட கருத்துக்களை தக்கவர் இரண்டுபேர் தந்துள்ளனர். நோய் தீர மருத்துவர்கள் மருந்துகளை எழுதித் தருவதைப் போல இந்திய ஒற்றுமையில் அடிப்படையிலே படிந்துள்ள பலவினத்தை நீக்கப் பல்வேறு பரிகாரங்களை இன்றைக்குப் பலர் கூறுகின்றனர். நமக்கிருக்கும் சிந்தனையெல்லாம் இந்திய ஒற்றுமை நல்ல நிலையில் இல்லை என்பதைப் பலர் உணர்ந்து, அதைக் களைய வேண்டிய யோசனைகளை வழங்க முன்வந்துள்ளனர் என்பதிலேதான்!

திராவிடம் தனி நாடாக விடுதலையுற்று, அதற்கான தனி அரசியல் சட்டம் வகுக்கப்படுவதிலேதான் நம்முடைய உழைப்பு, அறிவு எல்லாவற்றையும் நாம் முறையோடு பயன்படுத்தி வருகின்றோம். திராவிட விடுதலை உணர்ச்சி தீவிரமாகப் பரவி வருகின்ற இந்த நேரத்தில் இந்திய ஒற்றுமை குலையாமல் பாதுகாக்க வேண்டி வெளியிடப்படும் யோசனைகள் குறித்து நாம் கொஞ்சம் சிரத்தை காட்ட நேரிடுகின்றது. ஒரு நாட்டின் ஒற்றுமை குறித்துப் பேசப்படும் பொழுது முக்கியமான அடிப்படையை மறந்துவிடுவது அறிவீனமாகும். நாட்டின் ஒற்றுமை அரசியல் சட்டத்தை மாற்றுவதிலோ, திருத்தி அமைப்பதிலோ அல்லது வேறு வழிகளிலோ பாதுகாக்கப்படுகின்ற ஒரு சிறு பொருளல்ல. வரலாறு, பண்பாடு நாகரீகம், மொழி, இனம், மன இயல் இவைகளெல்லாம் ஒரு எல்லைக் கோட்டின் அளவில் ஆண்டாண்டு காலமாய் உருவாக்கும் தன்மையில் மலர்வதுதான் ஒரு நாட்டின் ஒற்றுமையாகும். இது பொது விதியாகும். இந்த அடிப்படையில், இந்திய ஒற்றுமையில் நேற்று, இன்று மட்டிலுமல்ல, இனி என்றைக்குமே நமக்கு நம்பிக்கை முகிழ்க்கப் போவதில்லை!

நாம் பல்லாண்டுகளாய் இந்தியாவின் ஒற்றுமை நிலை குறித்து —அதனது படுமோசமான விரிசலைப் பற்றிக் கூறி வந்த அதே விளக்கங்களைப் பரிதாபகரமான முறையில் இன்றைக்கு முன்னாள் தலைமை நீதிபதி மேகர் சண்ட் மகாஜன் அவர்கள் தனது கட்டுரையில் விளக்கமாகக் குறிப்பிடுகின்றார்கள்.

வங்காளத்தின் நிலைமையைக் குறித்து விளக்கையில், வங்காளம் வங்காளிகளுக்கே என்ற எண்ணம் பெரிதும் வளர்ந்துள்ளதென்றும், வங்காளிகள் அல்லாதவர்கள்மீது வங்காளிகளுக்கு வெறுப்பு நிறைய ஏற்பட்டுள்ளதென்றும், வங்காள உயர்நீதி மன்றத்தில் வேறு இந்தியப் பகுதியைச் சார்ந்தவர்கள் நீதிபதியாய் பணியாற்ற வங்காளிகள் இசையமாட்டார்கள் என்றும் எடுத்துக்கூறி இந்திய ஒற்றுமைக்கு வங்காளத்தில் கொஞ்சமும் மதிப்பில்லை என்பதை உணர்த்துகின்றார்.

உத்திரப் பிரதேச மக்கள் மீதும், அவர்கள் பேசுகின்ற இந்தி மொழி மீதும் வேறு பகுதிகளைச் சார்ந்தவர்கள் வெறுப்பையும் குரோதத்தையும் காட்டுகின்றார்கள்—உத்திரப் பிரதேசத்திற்கும், சில பல ராஜ்யங்களுக்குமிடையே போட்டி நிலைமை காணப்படுகின்றது. இது என்ன இந்திய ஒற்றுமையோ என அவர் வேதனைப்படுகின்றார்.

இவ்வண்ணம் மராட்டியம், பீகார், ஒரிஸ்ஸா, மைசூர், கேரளம், தமிழ் நாடு, ஆந்திரம் இன்னோரன்ன ராஜ்யங்களில் இந்திய ஒற்றுமையின் அவல நிலையை—திண்டாட்டத்தை முன்னாள் தலைமை நீதிபதி படம் பிடித்துக் காட்டுகின்றார். இந்திய ஒற்றுமை என்பது இன்றைக்கு இந்திய அரசியலில் நடைமுறையில் இல்லை என்பதற்கு நாம் என்னென்ன நிலைமைகளை சுட்டிக் காட்டுகின்றோமோ அவைகளையெல்லாம் ஒன்றுகூட விடாமல் தொகுத்து அவர் அக்கட்டுரையில் கூறியுள்ளார். நாம் இந்தப் போக்கை ஏற்றுக்கொண்டு வரவேற்கின்றோம். ஆனால், அதற்கு மாறாக, மேகர் சண்ட் மகாஜன் அவர்கள் இந்தத் தனி உணர்வுப் போக்கை மிகவும் கடுமையாகக் கண்டித்து, இந்திய ஒற்றுமையை வளர்க்க வேண்டுவதற்கான பரிகாரங்களை எடுத்துரைக்கின்றார் — முடியாத காரியத்தை சாதிக்க முனைகின்றார். இந்த நிலைமை மேலும் வளர்ந்தால் இந்தியா பல்வேறு நாடுகளாக சிதறுண்டு போகும் என்றும் முன்னறிவிப்பு செய்கின்றார்.

இந்தப் பயங்கர நிலைமை உருவாகாமலிருக்க, இந்த வேற்றுமை மேலும் தழைக்காமலிருக்க, இந்திய ஒற்றுமை பேணப்பட இராஜ்ய அரசாங்கங்கள், அதற்கான தனி அதிகாரங்கள் அத்தனையும் ஒழிக்கப்பட்டு இங்கிலாந்தில் இருப்பதைப் போல ஒரே அமைச்சரவை, சட்டமியற்ற அதிகாரம் படைத்த ஒரேபாராளுமன்றம் இந்தியாவிற்கு உடனடியாகத் தேவை என சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி தீர்ப்பளிக்கின்றார்.

அவர் சொல்லுவதை தெளிவுபடுத்த வேண்டுமானால் சென்னை, மைசூர், கேரளம், ஆந்திரம், பீகார், ஒரிஸ்ஸா, வங்காளம், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், அஸ்ஸாம் இன்னோரன்ன இராஜ்யங்களில் உள்ள சட்ட மன்றங்கள், அமைச்சரவைகள் உடனடியாக கலைக்கப்பட்டு, அவைகள் செலுத்தி வந்த அதிகாரங்கள் யாவும் டெல்லிப் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்

[தொடர்ச்சிபக்கம்—10]

ஏன்

சில்லரை விஷயமாம்!

'அவர் உணர்ச்சி வயப்படுகிறவர். அதனால்தான் நான் சென்ஸ் என்றார்!—என்றார்கள். உணர்ச்சி வயப்படாதவர்தான் பெரியவர் — என்ற இலக்கணமறியாதோர்.

'நேரு நம்மை ஏளனமாக மதிக்கிறார். எனவேதான் 'காட்டுமிராண்டி' என்றார் — என்று நாம் கூறினோம்; கருப்புக் கொடி காட்டினோம்!

நம் செயல் சரியா தப்பா—என்பதை இப்போதைய நேருவின் பேச்சு உறுதிபடுத்தியிருக்கிறது.

'நான் சில்லரை விஷயங்களில்தான் உணர்ச்சி வசப்படுவேன். பெரிய விஷயங்களில் அல்ல!'—என்றிருக்கிறார்.

நேரு உணர்ச்சி வசப்பட்டவர் என்று கூறியோரே! பார்த்தீரா அவர் எந்த விஷயத்தில் உணர்ச்சி வசப்படுபவர் என்று? சில்லரை விஷயத்தில்தான் உணர்ச்சி வசப்படுபவராம்!

தமிழர் இயக்கம் சில்லரை விஷயமாம், அவருக்கு! எனவே காட்டுமிராண்டி எனும் சொல் விழுந்தது! ஆனால் வங்காளிகளின், மராட்டியர்களின், குஜராத்திகளின் பலாத்கார செயல்களின்போது ஏன் பிறக்கவில்லை அந்தச் சொல்?

ஏன்?.. ஏன்?...ஏன்?

விகடனாரே; வம்பு வேண்டாம்!

[நம்மைத் தாக்கியும், நம் கொள்கைகளை மறைமுகமாகக் கிண்டல் செய்தும், ஆனந்த விகடன் தீபாவளி மலரில் ஒரு நாடகம் வெளியாகியிருந்தது. அந்த நாடகத்தின் பெயர் 'மனிதன் விழ்ச்சி!' அதை எழுதியவருக்கு இந்த நாடகத்தை 'தீபாவளிக்கு அடுத்தநாள் பரிசாக' அர்ப்பணிக்கிறோம்:]

காட்சி 1

[பூமியின் ஏதோ ஒரு கோடியிலிருந்து புறப்பட்ட ராக்கட் ஒன்று சந்திரனையும் சூரியனையும் கடந்து வான மண்டலத்தை வலம் வந்து வானோர் வாழும் பிரதேசத்தில் போய் இறங்குகிறது. அதிலிருந்து மனிதர் இறங்குகிறார். அங்கு ஒரு தேவன் வருகிறான். மனித உருவைக் கண்டதும் அந்தத் தேவன் விழிக்கிறான், 'திருதிரு'—என்று! கையில் கள் மொந்தை காணாததால் இவர் வேறு உலகத்தவர்—என்று தேவன் முடிவு செய்கிறான்.]

தேவன்: ஐயா நீங்கள் யார்? கையில் கள் மொந்தை இல்லையே!

மனிதர்; நான் மனிதன். மனிதத் தன்மை என்னிடம் இருக்கிறது. ஆகவே மொந்தை கையில் இல்லை! ஆமாம். நீங்கள் யார்?

தே: நான் குசேலன், கிருஷ்ணனுக்கு அவல் கொடுத்து பெரும் லட்சாதிபதியானவன்.

மனி: இப்போது அந்தச் சொத்தெல்லாம் இருக்கிறதா?

குசே: இல்லை. எல்லாம் (மொந்தையைக் காட்டி) இது சாப்பிட்டுவிட்டது!

மனி: குடிப்பதால் குடி கெட்டுவிடும் ஐயா. குடிக்காத போது எத்தனை குழந்தை இருந்தும் உங்களுக்குப் பாரமாக அவை தெரியாது. குடிக்க ஆரம்பித்துவிட்டாலோ வறுமை, வறுமை, எங்கும் எதிலும் வறுமையாக இருக்கும்!

குசே: உண்மை! உண்மை!

மனி: குடிப்பதை நிறுத்துங்கள். நீங்கள் மனிதனுவீர்கள்!

குசே: (உரத்த குரலில்) ஆம்; நான் இனிக் குடிக்கப் போவதில்லை. நான் மனிதனுகப் போகிறேன்! நான் மனிதனுகப் போகிறேன்!

காட்சி 2

[திடீரென்று வந்து குதிக்கிறான் அனுமான். அவன் கண்களில் நீர் கோர்த்து நிற்கிறது. மனிதர் காலில் நெடுமரம்போல் விழுகிறான்]

அனுமான்: என்னை மன்னிப்பீர்களா? நான் துரோகி. வாளி—எனும் மன்னனைக் காட்டிக் கொடுத்தவன். என் போன்றோர் இல்லாவிட்டால் நாடு குட்டிச்சுவராகி இருக்காது., என்னை மன்னிப்பீர்களா?

மனி: மன்னிப்பதுதான் எங்கள் பண்பு. கெஞ்சிக் கேட்ட பின்னரும் மூக்கையும் மார்பையும் அறுப்பது தேவனின் நீதி. துரோகம் செய்யாதே! மனிதனுக வாழ முயற்சி செய்!

அனு: மிகவும் நன்றி. (உரத்த குரலில்) நான் மனிதனுகப் போகிறேன்! மனிதனுகப் போகிறேன்!

காட்சி 3

இராவணன்: வர வேண்டும், வர வேண்டும்!

மனிதர்: நீங்கள் உட்காருங்கள், மாவீரா!

இரா: என்னைவிட நீங்கள் தான் மாவீரர் குயுக்தி எண்ணமும், கோணல் பார்வையும் குள்ளச் செயல்களும், குறும்புத்தனமும் நிறைந்த தேவலோக 'ஆனந்த விகடர்'களுக்குப் புத்தி புகட்ட வந்த நீங்கள்தான தீரர்; திராவிடத்து வீரர்!

மனி: இது அதிகமான புகழ்ச்சி!

இரா: ஆகா. என்னே அவையடக்கம்! மங்கிப் போயிருந்த திராவிட உணர்ச்சியை வளர்த்துவிட்ட உங்களுக்கு அவையடக்கம்கூட ஒரு அணி. ஆனால் இப்பண்பெல்லாம் கனவிலும் கருதாத தேவலோகத்து 'ஆனந்த விகடர்'கள்....

மனி: ஆமாம்; தங்களைத்தான் இரக்கமில்லாத அரக்கர் என்பார்களே, எப்படி தேவலோகத்தில் உங்களை உலவ விட்டார்கள், அந்த 'ஆனந்த விகடர்'கள்?

இரா: நீங்கள் அதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள், இரக்கமற்ற அரக்கர்—என்பதெல்லாம் புளுகு மூட்டை—என்று! ம்...... அதிருக்கட்டும், உங்கள் இயக்கம் இந்த உலகில் பிரசித்தி பெற்றுவிட்டது.

மனி: என்னியக்கமா?

இரா: ஆமாம்! 'ஒழுக்கமில்லாத தேவனை மனிதராக்கும் இயக்கம்!' எல்லோரும் இதை ஆதரிக்கிறார்கள்! சில பத்திரிகைகள் தான் எதிர்க்கின்றன.

மனி: மனிதராவதை ஏன் எதிர்க்கவேண்டும்?

இரா: எல்லாம் சுயநலம் தான்!

மனி: 'பொது நலம் தன்னை சுயநலம் கௌவும், பொது நலம் மறுபடியும் வெல்லும்!'—என்பதை அறியாதவர்கள்!.... சரி....வரட்டுமா? வணக்கம்.

காட்சி 4

[வியாசதேவன் எதையோ படித்துக்கொண்டு வருகிறான். எதிரே ஆள் வருவதுகூடத் தெரியாது முட்டிக்கொள்கிறான்.]

வியாசன்: ஏய். ஏன் முட்டினுய்? என் 'பவித்ரம்' கெட்டுவிட்டதே!

மனி: நீ பார்த்து நடக்க வேண்டுமய்யா! இல்லாவிட்டால் எல்லாம் கெட்டுவிடும்.

வியாசன்; யாருடன் பேசுகிறாய் தெரியுமா?

மனி: வேற்றுமைகளை விதைப்பவனிடம், விஷத்தைப் பரப்புவனிடம், மடமையை வளர்ப்பவனிடம்!

வியா: இல்லை; தேவலோகத்துத் 'துக்க விகடன்' ஆசிரியருடன்!

மனி: சரிதான். நான் முன்பு சொன்னது!

வியா: முன்பு சொன்னது கிடக்கட்டும். இப்போது சொல். நீ தானே மனிதன். தேவர்களிடையே விஷமப் பிரச்சாரம் செய்து மனிதத் தன்மையை அடையச் செய்தவன் நீதானே?

மனி: இருக்கலாம்!

வியா: ஆங்..................இருக்கலாம், பார்க்கலாம்—இதெல்லாம் எங்களுக்குப் பிடிக்காதவர்கள் பாஷை. ஆகவே, நீயும் எங்கள் எதிரி. இங்கிருந்து ஓடிவிடு. இல்லையென்றால்...

மனி: இல்லையென்றால்...?

வியா: உங்களைக் கண்டித்து சிறுகதை எழுதுவோம்; நாவல் எழுதுவோம்; கட்டுரை எழுதுவோம்; தலையங்கம் எழுதுவோம். அதையும் நீங்கள் மீறினால் • செய்திகளை இருட்டடிப்புச் செய்வோம்! 'மனிதத் தன்மை வாழ்க!'—என்று நீங்கள் பேசினால், 'மனிதத் தன்மை வீழ்க!'—என்று தொடர் கட்டுரை எழுதுவோம், எங்கள் 'துக்க விகடன்' பத்திரிகையில்!

மனி: இதுவா தேவர்களின் தர்மம்?

வியா: ஆமாம்; இதுதான் தேவதர்மம்; பத்திரிக்கா தர்மம்!

மனி: இந்த அதர்ம வழியில் நீங்கள் எத்தனை காலம் வாழ்ந்துவிடுவீர்கள்?

வியா: வாழ்வது வரை வாழ்ந்துவிட்டுப் போகிறோம்!

காட்சி 5

நாரதன்: (ஓடி வந்து) மனிதரே! மனிதரே!

மனிதர்: என்ன வேண்டும்? நீங்கள் யார்?

நார: நான் நாரதன். 'நாராயணு'—என்று கூவிக்கொண்டு திரிவேன். இந்தத் தேவர்களின் அட்டகாசங்களைப் பார்த்து என் கண் பூத்துவிட்டது. இனியும் தேவனுக இருக்க விரும்பவில்லை. என்னை மனிதனுக்கி விடுங்கள்!

மனி: மனிதனுக நான் மாற்ற முடியாது! நீங்களே மாறிக் கொள்ள வேண்டியதுதான்!

நார: அதற்கென்ன செய்ய வேண்டும்?

மனி: கலகமூட்டும் தொழிலைக் கைவிட வேண்டும்.

நார: இதோ கைவிட்டேன். (தம்புராவை ஒடித்து எறிகிறார்) இனி 'நாராயணு'—என்று சொல்லமாட்டேன். (மனிதர் அவன் கையில் ஒரு மவுத் ஆர்கனைக் கொடுக்கிறார்) நாராயணு கோஷம் போயிற்று! மனிதனுகப் போகிறேன்! மனிதனுகப் போகிறேன்!

['மனிதா'—என்று கூவிக்கொண்டே நாரதன் செல்கிறான்.]

காட்சி 6

[அருமையான பண் ஒன்றை வாசித்துக்கொண்டு மனிதர் நடக்கிறார்.. ஓடி வந்து காலைப் பிடித்துக்கொள்கிறான், ஸ்ரீ கிருஷ்ண பகவான்!]

மனிதன்: விடப்பா, காலை!

கிருஷ்ணன்: விடமாட்டேன், சரி என்று சொல்லும்வரை!

மனி: (சிந்தித்து) சரி...(கிருஷ்ணன் எழுகிறான். திடீரென அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு)....என்று எப்படித்

[தொடர்ச்சி பக்கம்—8]

இதற்குமுன்...

யவனக் கிழவருடன் பேசிக்கொண்டிருந்த புலவர் காரிக்கண்ணனார், குதிரைகளின் குளம்பொலி கேட்டுத் திடுக்கிட்டார்.

குதிரையில் வந்திறங்கிய சோழரின் படைவீரர்கள் கதவைத் தட்டி புலவரை அழைக்கிறார்கள். எழுந்து சென்று, 'என்ன வேண்டும்?'—என்று கதவைத் திறக்காமலே கேட்கிறார். 'யவனக் கிழவரையும் தங்களையும் அழைத்து வரச் சொன்னார், மன்னர்!—என்கிறார்கள்.

ஏன் யவனக்கிழவரைக் கூப்பிட்டனுப்ப வேண்டும் மன்னர்!'—என்று கேட்கிறார். புலவர். 'யவனக் கிழவரை மன்னர் துரோகி என்று நினைக்கிறார்'—என்று வீரர்கள் பதிலளிக்கவே புலவர் சிந்தனையில் ஆழ்கிறார்.

சிறிது நேரத்திற்குப் பின்னர், 'யவனக் கிழவரை மட்டும் அனுப்புகிறேன். நான் பிறகு வருகிறேன்' — என்று புலவர் சொல்லவே, அது பற்றி அரசனின் ஆணையைக் கேட்க ஒரு வீரன் அரண்மனை நோக்கி ஓடுகிறான்.

அரசன் இச்சேதி கேட்டு சந்தேகத்திற்குள் ஆழ்ந்தான். ஏன் இருவரும் உடன்புறப்பட்டு வரக்கூடாது—என்று சிந்தித்தான். உடனிருந்த முத்துநகையோ 'இரண்டு துரோகிகளையும் அழைத்துவர வேண்டியதுதான்!'—என்று முழங்கினாள்.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு மன்னன் புலவர் பேரிலிருந்த நம்பிக்கையைக் காட்டி, அவர் துரோகம் செய்யமாட்டார் என்பதைக் கூறி புலவரின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கிறார்.

அரசனின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட முத்துநகை, மன்னன் தமிழ்மொழி மீதும் அதைக் கற்ற புலவர்மீதும் வைத்துள்ள அன்பையும் மரியாதையையும் நினைத்து உணர்ச்சியால் கண் கலங்குகிறாள்.

மன்னன் புலவரின் வேண்டுகோளுக்கு இசைந்து விடவே, வீரன் திரும்புகிறான். "யவனக் கிழவர் மட்டும் வந்தால் போதும்!'—என்று மன்னனது விருப்பத்தைத் தெரிவிக்கிறான்.

காதலனைத் தேடி...காரிகை

தெருக் கதவு திறக்கப்படுகிறது. யவனக் கிழவர் மட்டும் வெளியே வந்தார். விலங்கிடாமல் தெரு வழியே அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

யவனக் கிழவர் கரிகாலனின்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். மண்டபத்துப் பட்டுத் திரைகளில் ஒளிந்திருந்த வீரர்கள் தங்கள் பார்வையைக் கூராக்கிக்கொண்டு பாய்வதற்குத் தயாராக இருந்தனர்.

'நீயார்' — என்று கேட்டான் மன்னன். அதற்கும் பதில் இல்லை! 'நீ யவனக் கிழவனல்ல; என்னைக் கொலை செய்யத் திரியும் இருங்கோவேள் என்கிறேன!'—என்றான் மன்னன். அதற்கும் மௌனம் தான்! முத்துநகை பரபரப்படைந்தாள்! பட்டுத் திரைகள் ஆடிக் கொண்டிருந்தன. அரசன் அடுத்து என்ன செய்யப் போகிறான் என்று தெரியாது எல்லோரும் விழித்தனர், மேலும் கேள்வி கேட்க வாயெடுத்தான் மன்னன்.

யவனக் கிழவரைக் பல கேள்விகள் கேட்டான், மறுபடியும்; பதிலேதுமில்லை. கரிகாலன் கிழவரை நெருங்கி அவர் தலையில் கட்டியிருந்த துணியை அகற்றினான்; அடுத்தது தாடி. அது ஒரு கையோடு வந்துவிட்டது!

ஆச்சரியம்! கரிகாலன் திமிதித்தவன்போல் ஆனான். முத்துநகை அதிர்ச்சி அடைந்தாள். ஆம். யவனக் கிழவர் உடையில் மறைந்திருந்தது புலவர் காரிக் கண்ணனார்தான்!

23.

மன்னன் தன் கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு எதிரே நிற்கும் புலவரைத் திரும்பத் திரும்பப் பார்த்தான். அவர் புலவரில்லாமல் வேறு யாராகவாவது இருக்கக் கூடாதா என்று தவிக்கிறான் என்பதை அவனது விழிகள் எ,த்துக் காட்டின. 'குழப்பம்' என்று கூறப்படும். ஒரு நிலை, தனது கொடுமையான வாய்க்குள் கொற்றவனை எடுத்துப் போட்டுக் கொண்டு கூத்தாடியது. எத்தனையோ சிக்கலான பிரச்சினைகளையெல்லாம் சற்று நேரச் சிந்தனையின்மூலம் சரிபடுத்தி வெற்றி கண்ட மாமன்னன் கரிகாலன், தனக்கெதிரே தமிழ்கூறும் முதுபெரும் அறிஞர் ஒருவர் துரோகியெனும் பெயர் சுமந்து நிற்கின்ற காட்சிக்குக் காரணம் கண்டு பிடிக்க முடியாமல் துடித்தான்.

முதுகில் காயந் தாங்கிக் களத்திலே வீழ்ந்திடும் வீரனொருவனின் மனோநிலைக்கும் கரிகாலனின் மனோநிலைக்கும் அதிக வேறுபாடில்லை. அந்த வீரன் அனுபவிக்கும் வேதனையைத் தான் அவனும் அனுபவித்தான். தன்னையும் தன் நாட்டையும் வாழ்விக்கும் தமிழ் மொழியை நாவாரப் பாடிக் களிக்கும் நாவலர் ஒருவர் நாட்டுத் துரோகியென்ற பட்டத்துடன் நிற்கின்ற கொடுமையை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தான். புலவரிடம் பேசுவதற்கு முயன்றான். தொண்டை அடைத்துக் கொண்டது.

வீரர்கள் அரசனை மரியாதையுடனும் அச்சத்துடனும் வணங்கி, "அரசே! நாங்கள் ஏமாந்து விட்டோம். யவனக் கிழவரைத் தப்பியோடச் செய்து விட்டு அவரது உடைகளைப் புலவர் அணிந்து கொண்டு யவனக் கிழவர்போலவே வந்திருக்கிறார். எங்களை மன்னித்து விடுங்கள் அரசே!" என்று கதறினார்கள்.

அரசன், அவர்களைப் பார்த்துக் கையமர்த்திப் பேசாமல் இருக்கச் செய்தான். வீரர்கள் விளக்கிக் கூறாமலே என்ன நடந்தது என்பதைக் கரிகாலனால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

முத்துநகைக்கு உடலெல்லாம் நெருப்பாகிவிட்டது. கனல் பறக்கும் கண்களுடன் தந்தையின் அருகே வந்தாள். புலவர், தன் மகளைப் பரிவுடன் நோக்கிக் கொண்டு நின்றார். முத்துநகை மிக அருகாமையில் வந்து அவர் முகத்துக்கு நேரே தன் முகத்தை நீட்டி. "உமது மகள் என்று சொல்லிக் கொள்ள நான் வெட்கப்படுகிறேன்." என்று மெதுவாகத்தான் சொன்னாள். ஆனால் அந்த வார்த்தைகள் எரிமலையிலிருந்து பொங்கி வழியும் அனற்குழம்பினையொத்திருந்தன. புலவர், அவளை அன்புடன் நோக்கியவாறு, "அருமை மகளே! அவசரப்படாதே!" என்று பதில் கூறினார்.

"இனிமேல் அவசரப்படுவதற்கோ — அமைதியடைவதற்கோ என்ன இருக்கிறது? தமிழ்ப் புலவர் கூட்டத்திற்கே அவமானச் சின்னமாக—அழிக்க முடியாத களங்கமாக நீர் நிற்கிறீர்! தமிழுக்கு உயிர்ச்சக்தி உண்டென்பது பொய்யில்லையே — அங்ஙனமிருக்க எவ்வாறு அந்தச் சக்தி உமது துரோக இருதயத்தை இதுவரையில் துளைக்காமல் மௌனம் சாதிக்கிறது?"

—என இடி முழக்கம் செய்தாள் முத்துநகை.

"அம்மா — முத்தூ! அரசரும் நீயும் என்னைப் பற்றித் தவறான எண்ணங் கொள்வதற்குக் காரணமாக இருந்த சூழ்நிலை என்னவென்று யான் அறியலாமா?"

—புலவர் அதிர்ச்சியுடன் கேட்டார்.

"சூழ்நிலையை வேறு விளக்க வேண்டுமோ? இந்நாட்டின் நல்வாழ்வு தவிர வேறெதுவும் தேவையில்லையென்று முடிவு கட்டிக் கிளம்பிவிட்ட இந்த முத்துநகையின் தந்தை ஒரு

கருணாநிதி நிகழ்ச்சிகள்

★

நவ. 7. குளத்தூர்
8. சேலம்
9. குமாரபாளையம்

துரோகி. சோழ மண்டிலத்தைப் பகைவனுக்குக் காட்டிக் கொடுக்கும் பாவி. கரிகால்மன்னரின் உயிருக்கு உலை வைக்கப் புறப்பட்டிருக்கும் கயவர்களுக்குத் துணை. எந்தச் சோழ நாட்டு மண்மீது சுந்தரத் தமிழ்க்கவிதைகளை இயற்றினரோ அந்தச் சோழ நாட்டுக்கு அழிவு தேடி அலையும் அக்கிரமக்காரர்! இதைவிட விளக்கம் வேறென்ன தந்தையே வேண்டும்?"

—மகளின் பேச்சு, புலவரின் நெஞ்சில் சம்மட்டி அடிகளாய் விழுந்தன.

"முத்துநகை! விளையாட்டுத்தனமாகப் பேசாதே! தமிழால் வளர்ந்தது இந்த உடம்பு. துரோகம் என்னுடைய ரத்தத் துளியின் ஒரு சிறு அணுவைக்கூடத் தொடத் துணியாது என்பதை மறந்து விடாதே!"

"ஆகா! இந்தப் பேச்சில் என் தந்தையின் கற்பனை வளம் காணப்படுகிறது. ஆனால் தூய்மை மருந்துக்குக்கூட இல்லை. துரோகம் தலைதூக்கி நிற்கிறது."

"இனி உன்னோடு பேசிப் பயனில்லை. தமிழ்ப் புலவர்களின் உள்ளத்தைப் புரிந்துகொண்டிருக்கும் தார்வேந்தர் சோழமன்னரிடம் பேசுகிறேன். அரசே! என் மகள் முத்துநகை, தங்களையும் சேர்த்துக் குழப்பமடையச் செய்திருப்பாள் என்று நினைக்கிறேன்......" என்று அரசனிடம் பேசத் தொடங்கினார்.

உடனே கரிகாலன், "இல்லை புலவரே! என்னையாரும் குழப்ப முடியாது, என்ன நடந்திருக்கும் என்பதை ஒழுங்காகவே புரிந்துகொள்ள முடிகிறது. யவனக் கிழவர் வேடத்திலேயிருந்த இருங்கோவேள் தப்பிவிட்டான். இல்லை! இல்லை! அவனைத் தப்பியோடும்படித் தாங்கள் செய்துவிட்டீர்கள். அந்த வேடத்தில் தாங்கள் வந்து விட்டீர்கள். நாட்டுக்குத் துரோகம் நினைத்தாலும் நண்பனுக்காகச் செய்த தியாகத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்." என்று குமுறும் உள்ளத்தை அடக்கிக் கொண்டு பதில் கூறினான்.

"மன்னவரே! தங்கள் குடை நிழலில் தமிழ் வளர்க்கும் என்னைப் பற்றி எவ்வளவு அவசர முடிவுக்கு வந்துவிட்டீர்கள். அது தங்கள் தவறு அல்ல. என் மகளுக்கு அளவுக்கு மீறி எழுந்துள்ள நாட்டுப் பற்று, அவளையும் குழப்பமுறச் செய்து, தங்களையும் குழப்பமுறச் செய்துவிட்டது."

—என்று புலவர் அமைதியாகப் பதிலுரைத்தார்.

அதுகேட்ட முத்துநகை, மேலும் ஆவேசம் பெற்றவளாகச் சீறி யெழுந்து, "துரோகியென்று நாங்கள் முடிவு கட்டுகிறோம். அது தவறானால் அதற்குத் தரப்படும் நேரடியான பதில் என்ன?" என்று கர்ச்சித்தாள்.

"நேரடியான பதில்! நான் துரோகி யல்ல என்பதுதான்!" புலவர் சாதாரணமாக இந்தப் பதிலைக் கூறினார்.

"அப்படியானால் அந்த யவனக் கிழவர் யார்?" அரசன் ஆத்திரத்துடன் கேட்டான்.

"அவர் யார்' என்று இப்போது நீங்கள் தெரிந்துகொள்ளக்கூடாது." புலவர் அலட்சியமாகப் பதில் மொழிந்தார்.

'இங்கேதான் ஒளிந்திருக்கிறது, துரோகம்!' என்று கத்தினாள் முத்துநகை.

"வயிற்றிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று அறிவதற்கு அவசரப்பட்டு யாரும் வயிற்றைக் கீறிப் பார்க்கமாட்டார்கள் அம்மா! பிறக்கும் வரையில் பொறுத்திருப்பர் சில பெற்றோர். நிமித்திகனை நாடிச் செல்வர் சில பித்தர்! பித்தரும் செய்யத் துணியாத காரியத்தை நீங்கள் செய்ய விரும்புகிறீர்கள். என் உயிர் போனாலும் சரி: அந்த யவனக் கிழவர் யார் என்று இப்போது நான் சொல்லமாட்டேன்."

"இவர் சொல்வதென்ன... அரசே! அதுதான் நன்றாகத் தெரிகிறதே இருங்கோவேள்தான் என்று!"

"உம்—அதுவும் சரிதான்! என் அருமை மகள் முத்துநகை கூறுவதுபோல் யவனக் கிழவராக வந்தவர் இருங்கோவேள்தான்! அப்படித்தான் இருக்கட்டுமே!"

புலவர் இதைக் கூறிவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டார். அதற்குமேல் அவர் பேச விரும்பவில்லை யென்பதை அவர் முகம் தெளிவாகக் காட்டியது. முத்துநகையின் ஆத்திரமும் ஆவேசமும் அழுகையாக மாறியது. கண்ணீர் பெருக்கெடுக்கக் கதறிப் புலம்ப ஆரம்பித்துவிட்டாள்.

"அய்யோ! தலைமுறை தலைமுறைக்கும் மாறாத களங்கம் ஏற்பட்டு விட்டதே எங்கள் குடும்பத்துக்கு! அப்பா! அப்பா!! ஏனப்பா உங்கள் அறிவு இப்படியெல்லாம் அழிவுச் சக்திகளுக்குத் துணை போயிற்று? சோழப் பேரரசில் உங்களுக்கு என்ன குறை? கொலு மண்டபத்தில் அமர்ந்து கோலோச்ச வேண்டுமெனக் கேட்டிருந்தாலும் அட்டியின்றித் தரக்கூடிய குணாளன் தானே நமது கொற்றவன்! அவருக்குப் பாதகம் நினைக்க எப்படியப்பா உங்கள் மனம் துணிந்தது? அரசே! அரசே!! என்னை மன்னித்துவிடுங்கள். இந்தத் துரோகியின் வீட்டில் நான் பெண்ணாய்ப் பிறந்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள்."

முத்துநகை அலறித் துடிப்பதைக் கண்ட கரிகாலன் அவளைச் சமாதானப்படுத்தி, "அழாதே முத்துநகை! தந்தை செய்த தவறுக்கு நீ என்ன செய்வாய்? உன் தந்தையின் களங்கத்தை மறைத்துப் புதிய ஒளியைப் பரப்புகிற அளவுக்குக் குடும்ப விளக்காக நீ திகழ்கிறாய். நீ தியாகச் சுடர். சோழ மண்டபத்தின் பெருமையைக் காப்பாற்றுவதொன்றே பெரிதெனக் கொண்டு தந்தையையும் காட்டிக்கொடுத்த உன் நெஞ்சுறுதியை—தாயகப் பற்றை—நான் மதிக்கிறேன். உன் உறுதிக்கும் துணிவுக்கும் மரியாதை செலுத்துகிறேன். நீ நாட்டுக்குத் தியாகம் செய்கிறாய். உன் தந்தை நண்பனுக்காகத் தியாகம் செய்கிறார்." என்று கண் கலங்கக் கூறிவிட்டு, புலவரைப் பார்த்து,

"வணக்கத்துக்குரிய தமிழ்ப் பாவாணரே! நானொருவன் வாழ்வது பிடிக்கவில்லையென்றால் என் மார்பில் வேல் நுழைத்திருக்கலாம் தாங்கள்! அதை விடுத்துத் தாயகத்தை எதிரிக்குக் காட்டிக் கொடுக்கும் இழிசெயலை மேற்கொண்டிருக்கத் தேவையில்லை. போனது போகட்டும். நீதிக்கு முன்பு, தரணியாளும் மன்னனும்—தமிழால் உலகை ஆளும் புலவரும் ஒன்றுதான். நீதி கிடைப்பதற்குப் பெரிதும் முயலுகிறேன். அதுவரையில் தாங்கள் அரண்மனையிலேயே சிறைப்படுத்தப் படுகிறீர்கள். பகைவனுக்குத் துணை நிற்கும் ஒருவரை வெளியில் உலவிட விடுவது தவறல்லவா? அது அறிவுடமையும் ஆகாது. அதனால் என்னை மன்னித்துக் கொள்ளவும். பெயர்தான் சிறைவாசம் என்று இருக்குமே தவிர தங்களுக்குத் தொல்லைகள் இருக்காது. நல்ல உணவு வழங்கப்படும். சிந்திக்கவும் எழுதவும் வசதிகள் உண்டு. செந்தமிழ்க் கவிதைகளைத் தாங்கள் எழுதிக் குவிக்கலாம், என் கடமையை நான் செய்யவேண்டியிருக்கிறது. மன்னிக்கவும்."

—என்று தழுதழுத்த குரலில் உரைத்துவிட்டு அசைவற்று நின்றான்.

"சிறைச்சாலையில் எனக்கு வசதிகளா, மன்னவா? கிளியை அடைக்கும் கூண்டு இரும்புக் கூண்டாயின் என்ன? பொன் கூண்டாயின் என்ன? அரண்மனையிலேயே சிறை வைப்பதால் என் பெருமை நிலைத்து விடுமா என்ன? துரோகி யென்று நீங்கள் எல்லாம் கூறிவிட்ட பிறகு என்னைக் கொன்று போடுவதே சிறந்த தண்டனையாகும். எனக்கும் அமைதி ஏற்படும்."

—என்று புலவர் மறுமொழி புகன்றார். அவர் பேச்சில் நடுக்கமில்லை. கம்பீரமாகப் பேசினார். அரசன், அதற்குப் பதில் கூறவில்லை. வீரர்களை அழைத்து அவர்களிடம் சைகை செய்தான். அவர்கள் புலவரை அழைத்துக் கொண்டு புறப்பட்டனர்.

"வருகிறேன் மன்னவா! வாழ்க!"

—என்று வாழ்த்திவிட்டு வீரர்களுடன் கிளம்பினார், காரிக் கண்ணனார்.

எப்போதும் போல மன்னன் அவனையறியாமலே ஏழடி நடந்து சென்று அதன் பின்னர், தான் நடந்து வந்ததை உணர்ந்து அப்படியே நின்று பொல பொல வென்று கண்ணீர் உகுத்தான்.

முத்துநகையின் கண்களும் அருவிகளாயின. அவள், அரசனிடம் வந்து "அரசே!" என்று கரகரத்த குரலில் அழைத்ததும் அரசனின் நெஞ்சம் வெடித்துவிடும்போல் ஆயிற்று. "என்னம்மா!" என்று அழுதவாறே கேட்டான்.

"என்னை மன்னித்து விடுங்கள்" அவள் விம்மியழுதாள்.

"உன்னை மன்னித்துவிடலாம். ஆனால், தமிழ்த்தாயைக் கதறி அழவிட்டு அவளது அன்புப் புதல்வரை அரண்மனையில் அடைக்க உத்திரவிட்டிருக்கிறேனே; அதற்கு நான் யாரிடம் மன்னிப்புக் கேட்பேன்?" என்று குழந்தை போலச் செருமி செருமி அழத் தொடங்கினான்,

[தொடர்ச்சி பக்கம்—12]

அதே டில்லிதான்!

★

நெய்வேலியில் நிலக்கரி! இனித் தமிழகம் கரிப்புகை நீங்காத தொழிற்சாலை காடாகும் என்றெண்ணினோம்! அந்த ஆசை மெல்லமெல்ல மண் மேடாகிக்கொண்டு வந்தது. மண் மேடா, தவறு அது பிணக்காடாகிவிட்டது என்று நினைத்துக்கொள்—என்று அறிவித்திருக்கிறது டில்லி!

'நெய்வேலியில்' நிலக்கரி கிடைத்தால்தான் சேலத்தின் மண் மடியிலே தூங்கும் இரும்பு பற்றி சிந்திப்போம்!'—என்று பேரம் பேசியிருக்கிறது டில்லி!

அப்படியானால் 'நெய்வேலி! நெய்வேலி!'—என்று கூவியதெல்லாம் காட்டுக் கூச்சலா? ஆம்; இத்தனை காலமாகியும் அந்த நெய்வேலியில், மந்திரிகள் 'ஸ்தல புராணம்' பாடிப் புகழ் பெற்ற நெய்வேலி திருக்ஷேத்திரத்தில் நிலக்கரி எடுக்கும் தொழில் துவங்கவில்லையாம்.

ஏராளமான நீர் வெளியே இறைக்கப்பட்டது! ஏராளமான பங்களாக்கள் அதிகாரிகளின் உல்லாசத்திற்கு அமைக்கப்பட்டன! —இவ்வளவுதான் நெய்வேலி தந்த பலன்!

ரஷ்யாவில் அதிகாரிகள் காலையில் ஜீப்பில் புறப்படுவார்களாம். அணைக்கட்டுப் பிரதேசத்திற்கு வருவார்களாம். பகல் முழுதும் உழைத்துவிட்டு 'ஜீப்பிலேயே' படுத்துறங்குவார்களாம்! ஆனால் இங்கே! நெய்வேலியிலுள்ள அதிகாரிகள் வீடுகளைப் பார்த்தால்...? வேலை துவங்காததற்கு முன்னே மாளிகை வாசம்!

ஏனிந்தத் தொய்வு? அதிகாரிகள் கூறுகிறார்கள், இயந்திரங்கள் வரவில்லையென்று! இயந்திரம் ஏன் வரவில்லை? டில்லியைக் கேள் என்கிறார்கள் சென்னை மாநில 'மந்திரிப் பாவைகள்'!

தாங்கள் வாழும் மணித்திருநாடாம் வட நாட்டிற்கென்றால் கருவூலம் திறக்கப்படும்.

தென்னகத்திற்கென்றால் 'ஏழை நாடு நாம். அதிகமாகப் பணம் கேட்டால்எப்படி? கையில் பணம் இல்லை அதனால் இயந்திரம் இல்லை?'—என்றெல்லாம் பல்லவி பாடப்படுகிறது.

டில்லிதான் நெய்வேலி இயந்திரம் வாங்க வழி வகுத்துத் தருவதில்லை. அதே டில்லிதான 'நெய்வேலியில் நிலக்கரி கிடைத்தாலொழிய சேலம் இரும்புத் தொழிற்சாலை இல்லை' என்றும் மிரட்டுகிறது.

பிள்ளையின் மணிக் கழுத்தைத் திருகிக்கொண்டே தொட்டிலையும் ஆட்டும் கொலை பாதகர்களை நம்பியா நம் நாடு நலம்பெற போகிறது?

தேவலோகத்திலும் தொலையவில்லை; பாழ்பட்ட பத்திரிக்கா தர்மம்!

விகடனரே;

[5—ம் பக்கத் தொடர்ச்சி]

தெரியாமல் கூறுவது? என்னை ஏமாற்ற நினைத்த நீ யார்?

கிருஷ் : ஸ்ரீ கிருஷ்ணபகவான்!

மனி : பகவான்—என்பது என்ன சாதியா?

கிருஷ் : ஆமாம்!..............நான் கேட்பதற்குக் கொஞ்சம் செவி சாய்க்கவேண்டும்!

மனி : நானென்றும் உயரமாக இல்லை. செவியைச் சாய்ப்பதற்கு! சும்மா சொல்லு.

கிருஷ் : ஐயா. எனக்கு சொந்த ஊர் துவாரகையுங்க. எனக்கு எங்கம்மா அப்பா இப்போ ஒருத்தருமில்லீங்க. அனாதை நானுங்க. பள்ளிக்கூடத்திலே நல்லமுறையில் நடிப்பேனுங்க. யமுனை நதிக்கரையிலும், பிருந்தாவனத்திலும் நான் நல்லா ஆடிப் . பாடியிருக்கேனுங்க. எனக்கு எப்படியாவது சினிமா சான்ஸ் வாங்கிக் குடுங்க. கதாநாயகனா இல்லாபோனாலும், ஒரு 'எக்ஸ்டிரா' வேஷமாவது தாங்க.

மனி : ஏம்பா இப்படியெல்லாம் புத்தி கெட்டுத் திரியறீங்க. சினிமாவிலே சேர்வது அவ்வளவு சுலபமா? உன் மாதிரி 'ஒழுக்கங்கெட்ட' ஆளுக்கு இப்போது அங்கு வேலையில்லாத சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறதப்பா!

மனி : மனிதருக்குத்தான் அங்கு வேலை. நீ மனிதனாக மாற முயற்சி செய். அப்புறம் பார்க்கலாம்!

[மனிதனாக மாறுவது எப்படி?—எனத் தெரியாது விழிக்கிறான் கிருஷ்ணன்.]

காட்சி 7

[அமர லோகத்தில் ஒரு அல்லோல கல்லோலம். அங்கு இதுவரை இருந்த ஒழுங்கீனங்கள் மறைய ஆரம்பித்தன. மதுக்கடைகளில் மது தேங்கிவிட்டன! ஒழுக்கம் தழைத்தது! உரிமையுணர்ச்சி வலுத்தது. தன்மான உணர்வும் பண்பாடும் வளர்ந்தன. துக்க விகடன், வாரமணி போன்ற பத்திரிகைகள் என்னென்னவோ செய்து பார்த்தன. இந்த அமைதியான அறிவு வளர்ச்சியில் மடமை வௌவால்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. இதற்குக் காரணம் இந்த 'மனிதர்'தான்—என்று அவரைக் 'வாரண்ட்'டில் கைது செய்தது. இராவணன் தலைமையில் ஒரு கண்டனக் கூட்டம் நடந்தது. அதில் குசேலன், அனுமான், நாரதன் ஆகிய 'மனிதர்கள்' பேசினர். உடனே அடக்குமுறை சூலத்தோடு சிவபெருமான் தோன்றினான். கூட்டத்தில் அமளி!]

இராவணன் : அமைதியைக் காப்பாற்றுங்கள். இரத்தத்தைக் குடிக்க வரும்சூலத்திற்கு நெஞ்சத்தைக் காட்டுங்கள்!

நார : ஒவ்வொரு சண்டையிலும் தோற்றோடிய தேவர்கள் நாங்களல்ல; வீர உறுதி பெற்றுவிட்ட மனிதர்கள் என்பதைக் காட்டுங்கள்!

அனு : பலசாலிகள் நாங்கள். இருந்தும் பலாத்காரம்—எனும் கோழைகளின் ஆயுதத்தை எடுக்கமாட்டோம் — என்பதைக் காட்டுங்கள்.

[மக்கள் அமைதியாக நிற்கிறார்கள்.சிவன் தன் கோரதாண்டவத்தை ஆட முடியவில்லை. வியப்பால் திகைப்படைகிறான்.]

குசே : ஏன் நிறுத்திவிட்டாய் உன் கோர தாண்டவத்தை? இவ்வளவு கட்டுப்பாட்டைக் கண்டு இதயம் நின்றுவிட்டதோ? ஆமப்பா நாங்கள் மனிதர்கள்!

சிவ : குசேலா, நீயா பேசுகிறாய்? நீ தேவரினம் என்பதை மறந்தாயா?

குசே : நான் தேவனல்ல: மனிதன்! மும்மூர்த்திகளை நம்பி உயிர் வாழும் தேவனல்ல; மூளையை நம்பி வாழும் மனிதன்! ஏதோ கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு உன்னை ஒன்றும் செய்யாமல் விடுகிறோம். கைகளைத் தூக்கிவிட்டாலோ?....

[முப்பத்து முக்கோடி கைகள் உயருகின்றன. சிவனுக்கு பயம் வந்துவிடுகிறது. சூலத்தை எறிந்துவிட்டு தலைதெறிக்க ஓடுகிறான்.]

காட்சி 8

[மனிதர் விடுதலை செய்யப்படுகிறார். தேவலோக 'மனிதர்கள்' அவருக்கு மகத்தான வரவேற்புத் தருகிறார்கள். இது பற்றி 'துக்கவிகடன்' பத்திரிகாலயத்தில் சர்ச்சை நடக்கிறது.]

ஆசிரியர் : ஆமாம் மனிதருக்கு எப்படி இவ்வளவு செல்வாக்குக் கிடைத்தது?

துணையாசிரியர் : எப்படியோ கிடைத்துவிட்டது! அதை அழிக்க வழி பாருங்கள்.

ஆசி : இருட்டடிப்பு செய்தாகி விட்டது. அவரை எதிர்போரையெல்லாம் தூக்கிவிட்டாயிற்று! இருந்தும் வெட்ட வெட்ட முளைக்கும் படை மாதிரி அவர் செல்வாக்கு வளர்கிறதே!

துணை : இனி அடுத்தது கதை எழுதுவோம்! நாடகம் எழுதுவோம், அவர்களைத் தாக்கி!

ஆசி : அதெல்லாம் தரம் குறைந்ததாயிற்றே!

துணை : இது மாத்திரம் என்ன தனியாகத் தரம் குறைவது? நாம் செய்கிற எல்லா......

ஆசி ; சரி சரி! உங்களிஷ்டப்படியே கதைகளில் நாடகங்களில் தாக்குவோம் அவர்களை! ஆமாம். தேவலோகத்தில் சாவுகள் அதிகமாகிக் கொண்டு வருகிறதாமே?

துணை : ஆம், எல்லாம் அந்தப் பாற்கடலால் வருவது! எத்தனை ஆயிர வருஷமாய் அந்த ஆதிஷேசப் பாம்பு பாற்கடலில் படுத்திருக்கிறது? நச்சுத்தலைப் பாம்பால் பாற்கடல் கெட்டது. பாற்கடல் கெட்டதால் காற்றுக் கெட்டது. மக்கள் சாகின்றனர்.

ஆசி : சரி இதை எப்படி வெளியிட வேண்டும்?

துணை : அப்படியே வெளியிட்டால்...?

ஆசி : நாம் நரகத்திற்குப் போக வேண்டியது தான்! ...ம்.... பத்திரிக்காதர்மத்தோடு இப்படி வெளியிடு!

தேவலோகத்தில் சாவு!

நாச சக்தி புகுந்துவிட்டது!

மனிதர் ஒழிந்தாலொழிய மோட்ச உலகிற்கு ஒரு விடிமோட்சம் இல்லை!

★

காட்சி 10

[சாவுகளுக்குக் காரணம் பாற்கடல் என்றறிகிறார் மனிதர். இதை மற்றவர்களுக்குக் கூறுகிறார். அவர்கள் அதற்கு வழி சொல்ல வேண்டுகின்றனர். அவர் நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு, பாற்கடலின் பாலைப் பெரும் குழாய்களின் வழியாக, அண்டவெளியில் இறைத்து விடுவது — என்று கூறுகிறார். அதன்படி வேலைகளும் நடைபெறுகின்றன. கேலிபுரிகின்றனர் மாற்றார். கற்பனைவாதம் என்றார்கள் சிலர். இருந்தும் வேலை துரிதமாக நடைபெறுகிறது. மனிதர் கூறியபடி பாற்கடலிலுள்ள விஷப்பால் குழாய்களின் வழியாக ஆகர்ஷண சக்தியை மீறி வானவெளியில் இறைக்கப்படுகிறது! அப்போது வாயடைத்துப் போகிறார்கள், வம்பு பேசியவர்கள்.]

காட்சி 11

[பாற் கடலில் பள்ளிகொண்டிருந்த நாராயணன் ஏதோ உணர்வால் எழுகிறார்.]

நாராயணன் : லட்சுமி! ஏதோ ஆடுகிற மாதிரியில்லை?

லட்சுமி : ஆமாம்! ஆமாம்!... ஆதிசேஷா! ஏன் உன்முகத்தில் சோகக்குறி?

ஆதிசேஷன் : ஐய்யோ — என் முதுகில் தரை குத்துகிறதே! அம்மா! அய்யோ! இறங்குங்கள், நாராயணா, இறங்குங்கள்!

[நாராயணன் பாற்கடலில் குதிக்கிறார். கழுத்து வரைக்கும் பால் இருக்கிறது. ஒரு மிடக்குப் பால் குடிக்கிறார்.]

நாரா : ஆ; சுசக்கிறது விஷம்! அய்யோ. உதவி! உதவி! எல்ப்! எல்ப்!!

[கருடாழ்வார் ஆம்புலன்ஸ் வருகிறது. நாராயணனை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்க்கிறது].

காட்சி 12

[உடனே உத்திரவு பிறக்கிறது, மனிதரைக் கைது செய்யச் சொல்லி! கைது செய்யப்பட்ட அவர்மீது தேவலோகத்தைக் கெடுத்த குற்றம் சாட்டப்படுகிறது. 'கெடுக்கவில்லை: கெட்டிருந்த தேவ உலகத்தைத் திருத்தினேன்'— என்கிறார். நீதிதேவன் அதை ஒத்துக்கொள்ளாது தீர்ப்பு வழங்குகிறார்.]

நீதிதேவன் : இந்த மனிதன் தேவலோகத்தைக் கெடுத்த காரணத்தால், இவன் நஞ்சுண்டு இறப்பானாக!

ஒருவர் : தேவலோகத்தில் நஞ்சு இல்லையே தேவா.

நீதி : ஏன் பாற்கடலில் உள்ள நச்சுப் பாலைக் கொண்டு வாருங்கள். அதுவும் கிடைக்கவில்லையானால், துக்கவிகடனில் கதை எழுதும் ஆசிரியரின் இதயத்தில் கட்டாயம் நஞ்சிருக்கும்- அதை எடுத்துக் கொண்டு வாருங்கள்.

[பாற்கடலுக்குச் சென்றவன் திரும்பி வருகிறான்.]

வேலையாள் : ஐயா பாற்கடலில் பாலே இல்லை! எல்லாம் வற்றிக் கிடக்கிறது!

[இதைக் கேட்ட மும்மூர்த்திகளும் கோபத்தோடு எழுந்து நிற்கிறார்கள்!]

நாரா : ஆகா, எல்லாவற்றுக்கும் காரணம் இந்த மானிடப்பதர். இவனை வாள்கொண்டு வெட்டுவோம் வாரீர்!

வேலையாள் : நிறுத்துங்கள்! ஏதாவது அவசரப்பட்டு செய்து விடாதீர்கள். கூட்டம் கூட்டமாக நம் தேவ மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இவரை ஏதாவது செய்தால் நீங்கள் வாழ முடியாது!

[திகைக்கிறார்கள் தேவர்கள். அதற்குள் அந்தக் கூட்டம் உள்ளே நுழைந்து விடுகிறது.]

காட்சி 13

[மும்மூர்த்திகளையும், துக்க விகடன் ஆசிரியர்களையும் ஒரு ராக்கெட்டில கட்டி வானவீதியில் எறிகிறார்கள். பின்னர்...குசேலர், நாரதர், இராவணன் ஆகியோர் தலைமையில் கூட்டாட்சி நடக்கிறது, அங்கு! . மனிதர் பூமி திரும்புகிறார்! தேவலோகத்து மக்கள் வாழ்த்துகிறார்கள் 'மனிதத் தன்மை வாழ்க!' 'மானுடம் வென்றதம்மா!'—எனும் வாழ்த்தொலிகளை எழுப்பி!]

— 'தரணிபரன்'

உடனே தேவை!

★

கார்ட்டூன்கள், மற்றும் சித்திரங்கள் வரையும் பத்திரிகைத் துறை அனுபவமுள்ள ஓவியர் உடனே தேவை, நேரிலோ — அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

— நிர்வாகி, "முரசொலி"
4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6.

சுழல் விளக்கு

மாலுமி

கணேசன்; ராமநாதபுரம்.

(?) சீன — இந்தியா தகராறைப்பற்றிய தங்கள் கருத்து என்ன?

இன்னொரு நாட்டிற்குள் அத்துமீறிக் காலை வைப்பவர் யாராக இருந்தாலும், அவரது ஆணவக் கொடிச்சீலை அறுக்கப்பட வேண்டும். வடக்கருடன் நாம் எத்தனை வேறுபாடு பாராட்டினாலும், இந்தியத் துணைக்கண்டத்தைக் காப்பதில் நம் தடந்தோள்கள் செங்கொடி ஏந்திய ஆதிக்கக்காரர்களை எதிர்த்து உயர்ந்தே தீரும்!

இ. ம. முகைதீன்; பாலக்கோடு

(?) நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்ல — என்று கூறுபவர்களை நம்பலாமா?

யாரையும் நம்பாதவர்களை நாம் எப்படி நம்புவது, தோழரே! சிலருக்கு, தாம் இந்தக் கட்சியைச் சார்ந்தவர் — எனக் கூறுகின்ற துணிவிருக்காது. அல்லது இந்தக் கட்சி என்று கூறினால் மற்றவர்களுக்கு எதிரியாகி விடுவோமே — என்ற 'தகாத பய' உணர்ச்சியால் கூறாதவர்களும் உண்டு. பொதுவாக தாம் எந்த அரசியல் கட்சியையும் சாராதவர்— என்று கூறுவோர் அஞ்சி அஞ்சிச் சாவும் பேதைகள் தாம்!

மரியநாயகம்; பருவக்குடி.

(?) கவர்னர் வேலை கிடைத்தால் எப்படி இருக்கும்?

ஒரு ஆண்டு பதவியிலிருந்தால் போதும், நீர் லட்சாதிபதி யய்யா, லட்சாதிபதி!

நடராசன்; காரப்பிடாரிகை.

(?) டில்லியில் மிருகக் கண்காட்சிசாலையை விரிவுபடுத்தப் போகிறார்களாமே?

அவர்களுக்கு மிருகங்களின் பேரிலுள்ள அக்கரையில் ஒரு சிறிதளவுகூட இந்த நாட்டு மக்கள் பேரிலில்லை — என்பதை எடுத்துக்காட்டுகிறது, இந்த நிகழ்ச்சி! விரைவில் அக் கண்காட்சியில் அழிந்து போய்க் கொண்டிருக்கும் 'இந்திய மனித மிருகம்' ஒன்று காட்சிக்கு வைக்கப்படும் நன்னாளை எதிர்பாருங்கள்!

மூர்த்தி; சென்னை—14.

(?) இந்தியாதான் சீனாமீது ஆக்ரமிப்பு நடத்தியது என்கிறாரே கிழக்கு ஜெர்மன் பிரதமர்?

அவரும் ஒரே குட்டையில் ஊறிய கம்யூனிஸ்ட் மட்டைதானே? நேத்திரம் திறந்து நியாயம் எதுவெனப் பார்க்கத் தெரியுமா அவர்களுக்கு?

லலிதா; கோவை–6.

(?) 'பெயர்களை ஏன் மாற்ற வேண்டும்; அப்படியே இருந்து விட்டுப் போகட்டுமே!'—என்கிறாராமே பக்தவத்சலம்?

இவர்கள் உபதேசம் எல்லாம் 'ஆமாம்'—என்று தலையாட்டுபவர்களிடம் தானே? ஏன்; வடக்கே திரும்பி இந்த உபதேசத்தை அவர் செய்யட்டுமே? பெனாரசை வாரணாசியாக்கினார்கள், பிரசிடெண்டை ராஷ்டிரபதி என்றாக்கினார்கள். பார்லிமெண்டை லோக்சபா ஆக்கினார்கள். அவுஸ் ஆப் ஸ்டேட்டை ராஜ்யசபா ஆக்கினார்கள். ராணுவத்தில் இடப்படும் சிறு சிறு உத்திரவுகளுக்கும் இந்தியைப் பயன்படுத்தினார்கள். அப்போதெல்லாம் எங்கே போனார் உபதேசம் புரியும் பக்தவத்சலனார்?

அன்பரசு; செங்கல்பட்டு.

(?) குருஷேவ் மருமகனுக்கு ரஷ்யாவில் பதவி கிடைத்திருக்கிறதாமே?

தன் மகளுக்குப் பதவி தந்த நேருவின் வழியைப் பின்பற்றுகிறார் எங்கள் குருஷேவ் என்று பெருமைப்படுங்கள் தோழரே!

சோமசுந்தரம்; பம்பாய்.

(?) சுதந்திரக் கட்சி மாநாட்டில் தகராறாமே?

அதுவும் ஒரு சுதந்திரம்தானே!

பி. ராமசாமி; காட்டூர்.

(?) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப்பின் என்ன திட்டம்?

ஐந்தாண்டுத் திட்டம் — ரஷ்ய நாடு தந்த இரவல் பெயர். அடுத்தது ஏழாண்டுத் திட்டம் —அதுவும் ரஷ்யர்கள் பயன்படுத்தும் சொல்தான்!

பி. மலையான்; சென்னை-1.

(?) இப்போது நடந்த தேர்தல்களில் தி. மு. கழகம் தொடர்ந்து தோல்வியுறுகிறதே, ஏன்?

தோல்வியே இல்லாத ஒரு கழகம் நம் கழகம்! வெற்றி பெற்று ஆட்சி பீடத்தில் வீற்றிருப்பதல்ல நம் குறிக்கோள்! மக்கள் மனப் பீடத்திலே நம் விடுதலைக் கொள்கை வீற்றிருப்பதே நம்முடைய இலட்சியம், அதை இந்தத் தேர்தல்கள் மிகத் துரிதப்படுத்துகின்றன. காணாத கிராமங்களைக் காணுகிறோம்; பேசாத பெரியோர்களிடம் பேசுகிறோம்.

எனவே புகாத உள்ளங்களில் நம் கருத்து புகுகிறது; பூத்துக் குலுங்குகிறது! எல்லாத் தேர்தல்களிலும் நாமே வெற்றியடைவோம் என்று பிறரும் மந்திரிகளும் எதிர்பார்க்கிறார்கள் —என்றால் இன்னும் நம்மிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறார்கள் என்று பொருள். தியாகத்திற்கும் தளராத உழைப்பிற்கும் இன்னும் தயாராகிக் கொள்ள வேண்டும்—என்று பொருள்.

சாகூல் அமீது; பாண்டுலோயா.

(?) நீங்கள் சந்தித்த பரிதாபத்திற்குரியவர்கள் யார்?

* பத்துப் பன்னிரண்டு வயதிலேயே 'நான் கதை வசனம் எழுதப் போகிறேன், நடிக்கப் போகிறேன்' — என்று கூறிக் கொண்டு சென்னை வந்து சொல்லொண்ணாத் துன்பப்படும் என் இளந்தோழர்கள்.

* சமுதாயச் சூழ்நிலையால் தவறான வழிகளில் நடக்கின்ற சகோதரிகள்.

* சென்னை நகராட்சி மன்றத்தில் ஜனநாயக வரம்பறியாது நடக்கும் எதிர்க்கட்சிகள்.

* இது நாள்வரை 'இந்தி—சீனி பாய் பாய்' என்று கோஷமிட்டவர்கள்.

(?) தண்டகாருண்யத் திட்டப் பிரதேசத்தில் அதிகாரிகள் 'அடிதடி' போட்டுக்கொண்டனராமே?

தண்டகாருண்யப் பிரதேசமே அடிதடிப்பிரதேசம் தானே. புராண காலம் தொட்டு! அதிலும் டில்லியின் ஆட்சியென்றால் கேட்கவாவேண்டும் அடிதடிக்கு?

(?) தமிழ்த் திரையுலகில் வரும் கதைகளெல்லாம் சொந்தக் கற்பனையில்லையோ?

இப்படிப் பேசுவதைப் பலர் 'நாகரிகமாக'க் கருதுகிறார்கள். 'இந்தக் கதை மராட்டியக் கதை. அந்தக் கதை வங்காளிக் கதை. இது மேல்நாட்டுக் கதையின் காப்பி'—என்று எல்லா மொழியும் தெரிந்தவர் போல் சிலர் பேசி விடுவார்கள். 'கதைத் திருடர்கள்' அங்கு இல்லை என்று கூறிவிட முடியாது. இருந்தாலும் சொந்தக் கற்பனைகூட சில சமயங்களில் இந்தப் பழிச் சொற்களால் அடித்துச் செல்லப் பட்டுவிடுகிறதே!

சிங்காரம்; மாயவரம்.

(?) பக்ரா அணைக்கட்டு எப்படி இருக்கிறது?

தென்னகத்தாரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு உருவாக்கிய பக்ரா அணைக்கட்டு உடைந்து கொண்டிருக்கிறது! அந்த உடைப்பை சரிப்படுத்த மாத்திரம் செலவான தொகை 10,00,00,000! ஆமாம். 10 கோடி ரூபாய்!

மதிவாணன்; உடுமலை.

(?) சில குற்றவாளிகளுக்குக் கம்பிகளில்லாத சிறையை ஏற்படுத்தியிருக்கிறதாமே வடக்கத்தி அரசு?

இதென்ன புதுமை, நம்முடைய நாடே கம்பிகளில்லாத சிறைதானே!

மகாதேவி; யாழ்ப்பாணம்.

(?) ஆப்ரிக்காவில் ஏன் இன்னும் கிளர்ச்சி ஓயவில்லை?

நம் தாயகத்தைப் போலல்லாமல், இலட்சியத்தை மறவாதவர்களும், துரோகச் சிந்தை சிறிதும் இல்லாதவர்களும், பதவிப் போதை தலைக்கேறாதவர்களும் நிறைந்திருக்கும் அந்தக் கண்டத்தில் கிளர்ச்சி ஓயுமா என்ன?

சாகீது; பாம்பன்.

(?) இந்தியாவின் மூன்றாம் திட்டத்திற்கு பிரிட்டிஷ் உதவுகிறதாமே?

தங்கள் வயிறு வளர்க்க யாரிடமும் பிச்சை கேட்கத் தயங்காத தன்மானமற்ற ஆட்சிதானே நம்மை ஆண்டு வருகின்ற ஆட்சி!

டி. கோவிந்தன்; சிதம்பரம்.

(?) ஆஸ்திரேலிய பார்லிமெண்டில சபா நாயகர் அனந்தசயனம் தலைமை வகித்தாராமே?

தோழர் சம்பத்தை வகுப்புவாதி என்று மலையாவில் வர்ணித்த இந்த விசித்ர மனிதர் 'ஒரு நாள் ராஜா' பதவிக்குத் தகுந்தவர் என்று அந்நாட்டினர் இவருக்கு 'ஒரு நாள் தலைவர்' பதவி அளித்ததுபற்றி ஆஸ்திரேலிய மக்களைப் பாராட்டுகிறோம்.

"கலைஞன்"
புதிய தொலைபேசி
எண்:
83423

குலைத்துவிடு...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

கப்படவேண்டும் என்று கூற வேண்டும்!

மேலும் அவரே இன்றைக்கு இராஜ்பங்களிலே அரசியல் கட்சிகளின் பேரால் பதவி வகிக்கின்ற ஆயிரக் கணக்கானவர்கள், தங்கள் பதவிகளை இழந்து வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கிக்கொண்டு தவிப்பார்கள். மேலும், ஒரு பெருங் கலகமே இந்தியாவின் ஐக்கிய அரசியல் சட்டத்தை எதிர்த்து நடைபெறும் என்றும் அவர் எதிர்பார்க்கின்றார்.

இதற்கிடமில்லாமல் சட்டம் உடனடியாக மாற்றப்பட்டால் தான் இந்திய ஒற்றுமை நிலைத்து நிற்கும் என்பது அவரது தெளிவான கொள்கையாகும்.

அத்துடன், இந்திய ஒற்றுமை பாதுகாக்கப்பட இந்திய இரயில்வேயில் வகுக்கப்பட்டுள்ள பிரிவுகளைப் போல ராஜ்யங்கள் பிரிக்கப்படவேண்டும் என்றும், ராஜ்யங்களின் தற்போதைய பெயர்கள் அவைகளுடைய பழைய தனி அரசியல் அமைப்பை அறிவுறுத்துவதால் அப்பெயர்களும் மாற்றப்படவேண்டும் என்றும் மேகர் சண்ட் மகாஜன் அவர்கள் யோசனை கூறுகின்றார்கள்.

தமிழ்நாடு என்று கூறினால் பண்டைய வரலாற்றுப் பெருமைகள், வாணிகச் சிறப்புகள், பண்பாட்டுப் புகழ், உலகத் தொடர்பு இவைகளெல்லாம் நினைவுக்கு வரும். நினைவுக்கு வந்தால் பாரதிய ஒற்றுமை நிலைகுலையும். எனவே, அப்படிப்பட்ட ஆபத்தான பெயர்கள் அறவே வேண்டாம். வங்காளம் கூடாது. ஆந்திரம் ஆபத்தானது. பஞ்சாப் பயங்கரத்தை விளைவிக்கும் என முன்னாள் நீதிபதி கருதுகின்றார். காலப் போக்கில் புதிய பாதை அமைக்கத் துடிக்கின்றார்.

பல்வேறு உயர்ந்த நிர்வாகப் பொறுப்பிலே இருந்த வடநாட்டுக்காரரான மகாஜன் இந்திய ஒற்றுமையைப் பாதுகாக்க இராஜ்ய சர்க்கார்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்கிறார். தென்னாட்டவரான சந்தானம் அவர்கள் இராஜ்ய சர்க்கார்களுக்கு மேலும் உரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று எழுதுகின்றார். இந்திய ஒற்றுமை பலமாக இவ்வாறு இரண்டு முரண்பட்ட கருத்துக்களை இருவரும் தருகின்றனர். இதிலிருந்து, எப்படிப்பட்ட மாற்றத்தாலும் இந்திய ஒற்றுமை நிலைத்திருக்காது. நடக்கமுடியாது என்ற ஒரே கருத்துக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக்கே யாவரும் வருவார்கள்.

இந்தப் பேருண்மையைத்தான் மகாஜன் அவர்களுடைய கட்டுரை தெளிவாக்குகின்றது. இந்திய ஒற்றுமையின் போலித் தன்மையை எப்படிப்பட்ட கொடுமையான அதிகாரத்தாலும் பாதுகாக்க முடியாது. இதை இந்திய ஒற்றுமை குறித்து கனவு காண்கிறவர்கள் உணர்ந்து திருந்தி உண்மை வழிக்கு—திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயரிய வழிக்கு வருவார்களாக!

இயற்கை எய்தினார் 'ஏழிசை மன்னர்'!

தியாகராஜ பாகவதர்—இந்தப் பெயர் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மகத்தான சக்தியைப் பெற்றிருந்தது.

அவர் குரலைக் கேட்பதற்கு கானமழையில் உள்ளம் நனைவதற்கு—மக்கள் திரள் எங்கிருந்தோவெல்லாம் வந்து கூடும்!

ஹாலிவுட்டின் ஆரம்ப காலத்திலே ரூடால்ப் வேலண்டினோ என்னும் பிரசித்தி பெற்ற நடிகனைப் பற்றி கதை கதையாகக் கூறுவார்கள். அந்த ஆணழகனுக்கு அமெரிக்கா முழுவதும் அவ்வளவு செல்வாக்காம். மங்கையர்கள் அவனோடு கைலாகு கொடுப்பதை ஏதோ பிறவிப் பயனாகக் கருதுவார்களாம். ஒவ்வொரு நாளும் வந்து குவியும் கடிதங்கள் கணக்கிலடங்காதாம்!

—அவ்வளவு சீரும் சிறப்பும் தமிழ்ப்பட உலகில் ஆரம்ப காலத்திலே முடிசூடா மன்னராக விளங்கிய பாகவதருக்கு உண்டு! அன்னிய மொழியிலே பாடினால்தான் அழகு—என்று பாவாணர்கள் முடிவு கட்டி வைத்திருந்த நேரத்திலே தமிழிசை பாடி 'ஏழிசை மன்னர்' என்று சிறப்புப் பெயர் பெற்றவர் பாகவதர்!

சக்கரவர்த்தியாக ஒரு காலத்தில் திரையுலகில் அரசாண்டவர் காலத்தின் கோலத்தால் பொருளாதாரப் பள்ளத்திலே தடுக்கிவிழ நேரிட்டது. இது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும்! அவருடைய மறைவு காரணமாக துயர்படும் அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது பிரிவுச் செய்தி கேட்டதும் நமது பொதுச் செயலாளர் விட்டிருந்த அறிக்கையைக் கீழே தருகிறோம்:

பொதுவாகத் திராவிடப் பெருங்குடி மக்கள், குறிப்பாகத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளமெலாம் கொள்ளை கொண்டவரும், நாடக அரங்கிலும், திரைப்பட அரங்கிலும், இசையரங்கிலும் ஈடும் எடுப்புமற்ற ஓங்குபுகழ் கொண்டவராய் விளங்கி இருந்தவரும், இனிய—எளிய — நயமான—கவர்ச்சிகரமான இசையால் தமிழ்ப் பெருங்குடி மக்களின் உள்ளத்திற்கு இன்பம் ஊட்டி வந்தவரும், ஏழிசை மன்னர் என்று பெருமை பெற்றவரும் ஆன திரு. எம். கே. தியாகராச பாகவதர் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு ஆற்றொணாத் துக்கமும் துயரமும் கொண்டேன். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவர் நடித்த திரைப்படங்களும், அவர் பாடிய இசைத் தட்டுக்களுந்தான் அவரின் நினைவின் அறிகுறிகளாக இலங்குகின்றன. அவற்றை உரிய முறையில் காப்பாற்றி நாட்டின் அழியாச் செல்வமாக ஆக்கித் தந்திடும் பொறுப்பை உரியவர்கள் மேற்கொள்வார்களாக!

பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளபடி அவர் பாடிய இசைத் தட்டுக்களை உரிய முறையில் காப்பாற்றி வைப்பதுதான் நம்மையெல்லாம் பாடிப் பரவசப்படுத்திய பாகவதரது நினைவைக் காப்பாற்ற நாம் செய்யும் கடமையாகும்!

★

'சகோதரி'யில் சந்திரபாபு

'முரசொலி' மாறன் திரைக்கதை வசனம் எழுதி, பீம்சிங் டைரக்ட் செய்யும் 'சகோதரி' திரைப்படம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. குப்பி கர்னாடகா — ஏவி. எம். நிறுவனங்களின் கூட்டுத் தயாரிப்பான இப்படத்தில் சந்திரபாபுவும் நடிக்கிறார். படத்தின் வெற்றிக்கு அவருடைய பாத்திரமும் ஒளி சேர்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படம் டிசம்பர் முதல் வாரம் பவனி வர இருக்கிறது.

★

'தெய்வப்பிறவி'யில் தங்கவேலு

கமால் பிரதர்ஸ் படத் தயாரிப்பு நிறுவனத்தார் தயாரிக்கும் 'தெய்வப் பிறவி'யில் நகைச்சுவை நடிகர் தங்கவேலு புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கிருஷ்ணன் பஞ்சுவின் திறமையான டைரக்‌ஷனிலே உருவாகும் இந்தப் படத்தில் நடிகர் திலகம் கணேசன், இலட்சிய நடிகர் ராஜேந்திரன், பத்மினி, ராஜம் ஆகியோர் நடிக்கின்றனர். இதற்கான கதை வசனத்தை கோபாலகிருஷ்ணன் எழுதியிருக்கிறார். விரைவில் வர இருக்கும் படங்களில் இதுவும் ஒன்று!

★

சீதா பிலிம்ஸ் சமூகப் படம்!

சீதா பிலிம்சார் தயாரிக்கப் போகும் பெயரிடப்படாத திரைப் படமொன்றில் டி. ஆர். மகாலிங்கம், எஸ். வி. சுப்பையா, தாம்பரம் லலிதா, விஜயலட்சுமி ஆகியோர் நடிப்பார்கள். சக்தி கிருஷ்ணசாமி கதை, வசனம் அமைக்கப்போகும் இப்படத்தை எடிட்டர் பெருமாள் டைரக்ட் செய்யவிருக்கிறார்.

★

புதிய படம்!

ராணி புரொடக்‌ஷன்சாரின் தயாரிப்பிலிருக்கும் படத்திற்குப் பேராசிரியர் நா. பாண்டுரங்கன் எம். ஏ. வசனம் எழுதுகிறார். எஸ். வி. சுப்பையா, வி. ஆர். ராஜகோபால், பண்டரிபாய், மைனாவதி ஆகியோர் இப்படத்தில் பங்கேற்பார்கள்.

★

கைவிடப்பட்ட கதை!

படமாக்குவது சாத்தியமல்ல—என்று விடப்பட்ட எத்தனையோ கதைகள் உண்டு. மிகப் பெரிய கதை என்றோ, சிக்கல்கள் ஆயிரம் நிறைந்தது என்றோ, படிக்கக் தகுந்த கதைதான், படமாக்கத் தகுந்த கதையல்ல — என்றோ நிராகரிக்கப்பட்ட பல கதைகள் இருளில் தூக்கி வீசப்பட்டிருக்கின்றன.

அப்படிக் கைவிடப்பட்ட கதைகளில் ஒன்றுதான் ஸ்காட் பிட்ஸ் ஜெரால்டின் 'டெண்டர் இஸ் தி நைட்' எனும் பெருங்கதை! அதைத் துணிந்து படமாக்க முன் வந்துள்ளது டுவெண்டியத் செஞ்சுரி கம்பெனி. இந்த விஷப் பரிட்சையில் அவர்கள் தேர்வார்களா—என்று உலகம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★

மதுரை மாவட்டத்தில் அறிஞர் அண்ணா

★

நவம்பர்

7	மாலை 5 மணி	கோம்பை
,,	இரவு 8 மணி	தேனி
8	காலை	மதுரை எழுத்தாளர் மன்றம்
,,	மாலை 5 மணி	மேலூர்
,,	இரவு 8 மணி	மதுரை பொதுக்கூட்டம்
9	மாலை 4 மணி	மதுரை அமெரிக்கன் கல்லூரி
,,	மாலை 5 மணி	அலங்காநல்லூர்
,,	இரவு 8 மணி	சோழவந்தான்
11	காலை	போடி திருமணம்

★★★★★★★★★★★★★

அசோசியேட் புரொடியூசர்ஸ் படத்தில் மல் யுத்தம்

அசோசியேட் புரொடியூசர்ஸ் தயாரித்துக் கொண்டிருக்கும் தமிழ்ப் படத்திற்காக சமீபத்தில் தாராசிங்—பாலையா இருவரும் மல்யுத்தம் செய்யும் காட்சி படமாக்கப்பட்டது. யோகானந்த் டைரக்‌ஷனில் உருவாகும் இப்படத்திற்கு மாறன் திரைக்கதை வசனம் எழுதுகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக 'செனட்' தேர்தல்

பேரன்புடையீர்,

வணக்கம். அண்ணாமலைப் பல்கலைக் கழக பதிவு பெற்ற பட்டதாரிகள் தொகுதியில் செனட் உறுப்பினராகப் போட்டியிடும் எனக்கு வாக்காளர்கள், தங்கள் முதல் வாக்கினை அளித்து தவி வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்.

தங்கள்,

(க. முத்தையன்)

க. அறிவழகன்.

பொருளாதாரவிரிவுரையாளர்

சர். தியாகராயர் கல்லூரி,

சென்னை-21.



ஜி. கே. புரொடக்‌ஷன்ஸ் தயாரிக்கும் 'சகோதரி' படத்தில் பாலாஜி, பிரேம்நசீர், ராமராவ், ராஜசுலோசனா.

கொள்ளைக்காரர்கள் கூடினார்கள்; ‘கொத்தடிமை ராகம்’ பாடினார்கள்!

அரசியல் பெருங் கொள்ளைக்காரர்களின் மாநாடு நடைபெற்றிருக்கிறது! அரசியல் பெருங் கொள்ளைக்காரர்கள் என்ற பெயரில் அல்ல; கவர்னர்கள் பெயரில்! பொது மக்கள் பணத்தை இலட்ச லட்சமாக வாரி விழுங்கும் அரசியல் பூதங்களாம் கவர்னர்கள் மாநாடு கூடிப் பேசியிருக்கின்றனர்.

பெருங் கொள்ளைக்காரர்கள், பூதங்கள்—என்று அவர்களை வர்ணிப்பதெல்லாம் தனிப்பட்ட திரு. மேதி பேரிலோ திரு. ராமகிருஷ்ண ராவ் பேரிலே இருக்கிற கோபத்தைக் காட்டிடுவதற்காக அல்ல! மக்களின் வரிப் பணத்தை வீணாக்கும் பதவிகளில் இருக்கின்றவர்களைத்தான் இவ்விதம் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

பத்து லட்சம், இருபது லட்சமென்று மாநிலத்திற்கேற்றபடி ‘செலவுசெய்யும்விக்ரகங்க’ளாக கவர்னர்கள் விளங்கி வருகிறார்கள். அவர்களுடைய பதவி ஜனநாயக அமைப்பிற்கு ஏற்றது தானா?—என்ற பிரச்னை நெடுநாட்களுக்கு முன்னே மக்கள் மன்றத்தில் வைக்கப்பட்டதோர் பிரச்னையாகும்.

ஆட்டுக்கு எப்படித் தாடி அவசியமற்றதோ, அப்படித்தான் நாட்டுக்குக் கவர்னர்—என்று முடிவெடுத்துவிட்டனர் முன்பே!

இந்த ஏழை நாட்டுக்கு இந்த ஆடம்பரப் பதவி தேவையா என ஒரு கணம் சிந்தித்தோர்—கவர்னர்களின் அன்றாட வாழ்க்கையைக் கவனித்தோர் தந்த பதில் தான் அது!

கவர்னர்கள் என்ன பெரும் பணியாற்றுகிறார்கள்? சட்டசபையைத் துவக்கி வைக்கிறார்கள். துவக்கி வைக்கும்போது நீண்ட அறிக்கையொன்றைப் படிக்கிறார்கள், நெடுநேரம்! இரவெல்லாம் கண் விழித்து, நாட்டு நிலையை ஏட்டுப் பிரதிகளில் வடித்து அவர்களே எழுதிய அறிக்கையா அது? யாரோ எழுதுகிறார்கள். இவர்கள் படிக்கிறார்கள்! இவர்களின் உரை மீது—கவர்னரின் உரைமீது நடக்கும் விவாதத்தையோ, அதன் முடிவையோ உட்கார்ந்து காணுகிறார்களாயென்றால் அதுவுமில்லை, ஏதோ படிக்கும் கடனைக் கழித்துவிட்டு ராஜபவனுக்கு ஓடி விடுகிறார்கள்!

பின்னர் நாட்டியக் கச்சேரிகள், பாராட்டுவிழாக்கள், நாடாக் கத்தரித்துத் துவக்கும் விழாக்கள், அடிக்கல் நாட்டும் விழாக்கள்—இப்படி ‘விழாக் காலத்து மூர்த்தி’யாக உலா வருவார்கள்!

போலீஸ் மோட்டார் சைகிள் முன் செல்ல ராஜபவனத்திற்கும் விழா மண்டபத்திற்கும் போய் வந்து கொண்டிருப்பார்கள்!

வேனிற் காலத்திற்கு ஒரு மாளிகை, குளிர்காலத்திற்கு ஒரு மாளிகை—என்று காலத்திற்கேற்றபடி மாளிகை மாற்றும் சுக வாசியாக வாழ்வார்கள்!

ஆம்; ஏழை நாட்டின் மாநில கவர்னர்தான் இத்தனை படோடாபங்களைச் செய்து வாழ்பவர். நாட்டில் எத்தனை குறையிருந்தாலும் இவருக்குக் குறை இருக்காது.

மக்கள் மிருகங்களிலும் கேவலமாய்த் திரிந்தாலும், கூழில்லை வயிற்றுக்கு—என்று கண்ணீர் விட்டு அழுதாலும், கையது கொண்டு மெய்யது பொத்தி ஆடையின்றி, வீடின்றி வாழ்ந்தாலும் இந்தக் கவர்னர்களின் சம்பளத்தில் ஒரு புதுக் காசுகூடக் குறைவதில்லை!

கோடி கோடியாய் இந்த நாடு மற்ற நாடுகளுக்குக் கடனாளியாய் இருந்தாலும் இவர்களுக்கு சம்பளம் அழுது தொலைப்பதிலே அரசாங்கம் சுணக்கம் காட்டியதில்லை.

வறுமை ஏழையை வாட்டியதாக வரலாறு உண்டு. பணக்காரர்கள் அந்த வறுமைப் பிடியில் சிக்கியதாகக் கதை உண்டு. ஆனால் இந்தக் கவர்னர்களின் வாழ்வில் மாத்திரம் வறுமையும் இல்லை; வாட்டமும் இல்லை. இத்தகைய வசதி பெற்றவர்கள் அண்மையில் மாநாடு கூட்டியிருக்கிறார்கள். ஆண்டுக்கொரு தடவை கூடும் மாநாடுதான் இது! எதற்குக் கூடுகிறார்கள்? ஏன் கூடுகிறார்கள்?

படித்த கணவனைப் பெற்றுவிட்ட வசதி மிக்கக் குடும்பத்துப் பெண்கள் நடத்தும் லேடீஸ் கிளப்—போன்றதே இம்மாநாடு! வேண்டுமானால் அரசியல் அந்தஸ்தில் ஒருபடி உயர இருக்கலாம். கவர்னர்கள் வேலையற்றவர்கள்—என்று நாம் நினைத்தாலும் டில்லிக்காரர்கள் அவர்களை ஆங்காங்கு வைத்து ‘வளர்ப்பதிலே’ கண்டிப்பாக ஒரு உள் நோக்கம் இருக்கும்.

கவர்னர்கள் டில்லி அரசியல் ஏஜெண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். வெள்ளைக்காரன் காலத்தில் மாநிலங்களில் கலவரமில்லாமல் நாட்டை நடத்தி செல்பவருக்குக் கவர்னர்—என்று பட்டம் தந்து வசதி பல தந்து வைத்திருந்தான். அதே போல் இப்போதும் மாநிலங்களில் கலவர நிலை ஏற்பட்டால் டில்லியை உதவிக்கு அழைக்க, உட்கார வைத்திருக்கிறார்கள் ஒரு அதிகார பொம்மையை!

டில்லிக்கு எதிராக ஒரு கூக்குரல் கிளம்பினாலும் உடனே அந்தக் குரல் எழுப்பிய குரல் வளையை நெறித்துக் கொல்வதற்காக இருக்கும் டில்லியின் ஏஜெண்டுகளே இவர்கள்!

காங்கிரஸ் பதவிக்கு வருவதற்காக வழி பல செய்கின்றவர்களும் இந்த மாநிலக் கவர்னர்கள் தாம்! முன்பொரு தடவை எதிர்க்கட்சி பலம் பெற்றிருந்த இந்த மாநிலத்தில், கவர்னர் தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து ராஜாஜியை கொல்லைப்புறமாக அழைத்துப் பதவியில் அமரச் செய்த கதையை யாரும் மறந்திருக்க முடியாது.

அதே போல் கேரளாவில் 28 மாத காலமே எதிர்க்கட்சியை ஆட்சி செய்யவிட்டார், அந்த மாநிலத்துக் கவர்னர். 28-வது மாதத்தில் கவர்னர் எந்தக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரோ, அதே கட்சியைச் சார்ந்தவர்கள் கலவரம் நடத்தினார்கள்; குழப்பம் விளைவித்தார்கள். இதைக் காட்டி எதிர்க் கட்சியின் கையிலிருந்த அதிகாரத்தைப் பறித்தார் கவர்னர்.

கவர்னர்கள், நம்மந்திரிகள்பேரிலுள்ள அவ நம்பிக்கையின் காரணமாக சிருஷ்டிக்கப்படும் அரசியல் அதிகாரிகள்! தமிழகத்தின் காங்கிரஸ் மந்திரி இன்றில்லாவிட்டாலும் நாளை டில்லியின் கொடிய ஆதிபத்யத்திற்கெதிராக எதிர்ப்புக் கொடி தூக்கிவிட்டால் என்ன செய்வது—என்ற அச்சத்தின் காரணமாக—அவநம்பிக்கையின் காரணமாக நியமிக்கப்பட்டிருப்பவர்கள். தமிழகத்திற்குத் தமிழ் நாட்டாரையே நியமித்தால் சீர் கெட்டுவிடும்-என்று ஒரு மாநிலத்திற்கு இன்னொரு மாநிலத்துக் காரரைப் போட்டிருப்பார்கள்.

சென்னைக்கு அஸ்ஸாம் நாட்டுக்காரர், கேரளத்திற்குக் கர்னாடகத்துக்காரர், இப்படி மாற்றிப் போட்டிருப்பார்கள், முகம் தெரியாது அடிக்க மலபார் போலீசை தமிழ் நாட்டிற்குக் கொண்டு வருவதைப் போல! ஏதாவது டில்லிக்கு மாறாக செய்து விட்டால் உடனே கொடிய நடவடிக்கை எடுத்திட வடக்கர்கள் ஆளுகின்ற அருமையான வழி! இந்த ‘ஊேக் கோட்டுக்கார’ கவர்னர்களின் நடவடிக்கைகளை டில்லி ஆராய்கிறது, ஆண்டுக் கொருமுறை! யார் யாருடைய நாட்டில் எந்த வித எதிர்ப்பு இருக்கிறது. எப்படி அடக்கலாம் — என்பதை ஆராய்வர், இந்தக் கவர்னர்கள் மாநாட்டில்!

இப்போதைய மாநாட்டிலும் அப்படித்தான் ஆராயப்பட்டது. இனி சுடுவதைத் தவிர்க்கவேண்டும், முடிந்தவரை—என்கின்ற கருத்தை கவர்னர்கள் கூறியிருக்கிறார்கள்.

நல்ல கருத்து! பாராட்டப்பட வேண்டியதுதான்! — என்றாலும் அடுத்து ஒரு கேள்வி எழுகிறது. இனி சுடுவதைத் தவிர்க்கவேண்டும், முடிந்தவரை—என்றால் இதுவரை மிகமிக் கொடூரமாகத்தானே சுட்டிருப்பார்கள்? சுட்டுச் சலித்த பிறகு, தங்களை தங்கள் மனதே குத்திக் குலைத்த போது, சுடுவதைத் தவிர்க்க வேண்டும்—எனக் கருத்துத் தந்திருக்கிறார்கள். மேலும், கேரளத்தில் ஏன் நடவடிக்கை எடுக்கப்பட்டது—என்பதை டில்லி மந்திரி பந்த் விளக்கியிருக்கிறார்! ஆனால் நடவடிக்கை எடுத்தது கவர்னரின் பெயரால்! நடவடிக்கை எடுத்தது பற்றிய விவாதம் கவர்னர்கள் கூட்டத்தில் வந்தபோது நடவடிக்கை எடுத்த கவர்னரா விளக்கம் தந்தார்? இல்லை; ஒரு டில்லி மந்திரி விளக்கம் தந்தார். இதிலிருந்தே கவர்னர்கள் ‘நாட்டிற்குத் தேவையற்ற பதவியை வகிப்பவர்கள்’ ‘டில்லியின் கலப்பில்லாத அரசியல் ஏஜெண்ட்டுகள்’—என்று விளங்குவது வெள்ளிடை மலை.

வடக்கு வளர்கிறது

நாள் தவறினாலும் பொழுது தவறினாலும் வடக்கு வளர்வது தவறுவதில்லை. கடந்த வாரம் வடக்கு வளர்ந்த கதை இது :

* வெளிநாட்டுப் பயிற்சி பெற இந்துஸ்தான் உருக்கு நிறுவனம் 923 இன்ஜினீயர்களை வெளிநாட்டிற்கு அனுப்பியது. இது தவிர பொதுத் துறையில் துவக்கப்பட்டுள்ள பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளுக்கு 2000 இன்ஜினீயர்கள் தேவையாம்.
* கனரக மின்சாரத் தொழிற்சாலைக்கு எரிவாயு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிர்மாணிக்க 1,25,000 பவுன் செலவாகுமாம். அத்தொழிற்சாலை 15,00,000 கன அடி எரிவாயுவை உற்பத்தி செய்யும். இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்படுவது எங்கே? வட நாட்டிலுள்ள போபாலில்!
* ரூ. 70,00,00,000 ரூபாய் செலவு செய்து காட்டு வளத்தை அதிகரிக்கப் போகிறார்களாம்! இந்த 70 கோடி ரூபாயும் கொட்டப்படும் இடம், வடக்கேயுள்ள உத்திரப் பிரதேசம்!
* மூன்று கனரக இயந்திர உற்பத்தி சாலை நிறுவப்படும். அதற்கு ஆகப் போகும் செலவு 200 கோடியாம்! இது நிறுவப்படும் இடம் வழக்கம்போல் வட நாட்டிலுள்ள ஹாதியா—எனும் இடம்!
* பிரிட்டிஷ் டிராக்டர்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்கான ஆலை நிறுவும் திட்டம் உருவாகிறது. ஆண்டுதோறும் 1,250 டிராக்டர்கள் செய்யப்படுமாம்! இதுவும் வட நாட்டில்தான் அமையுமாம்.
* அலுமினியத் தொழிற்சாலை அமெரிக்க நிறுவனம் ஒன்றின் கூட்டுடன் அமைய இருக்கிறது. இது அமையப் போகும் இடம் உத்திரப் பிரதேசத்திலுள்ள ரிகாந்தி எனும் அணைக்குப் பக்கத்தில்!

பதிவு எண்: 7079 புதிய காசு 16

'பகீரத'ப் பிரயத்தனம் பயன்படாது!

மனிதனின் கதை

தொடர் கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

அண்மையில் ஒரு பத்திரிகை தன் 'அதிசய மூளை'யைப் பயன்படுத்தி கேலிச் சித்திரம் ஒன்று வரைந்திருந்தது. அச்சித்திரம் சிதம்பரம் தேர்தலில் காங்கிரஸ் வெற்றியடைந்ததைக் குறித்து வரையப்பட்டதாகும்.

காமராசர் நடராசர் போல் ஒரு காலைத் தூக்கிக்கொண்டு நிற்கிறார். அவர் முகத்தில் ஆனந்தம் தவழ்கிறது. ஒரு கையை கோணிக்கொண்டு இன்னொரு கையால் அபயம் தருகிறார்.

அவரது காலடியில் தி. மு. க.—என்ற உருவம் குழந்தை உருவம் உள்ள அரக்கன்போல் மிதிபட்டுக் கிடக்கிறது.

இந்தக் கேலியோவியத்தின் பொருள் மிக எளிதில் விளங்கும் தன்மையது. 'சிதம்பரத்தில் தி. மு. கழகம் என்ற அரக்கனை மிதித்துக் கீழே தள்ளிவிட்டு காங்கிரஸ் காமராசரின் ரூபத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடுவதாகத்தான் அந்தச் சித்திரம் காட்டுகிறது!

ஒரு உபதேர்தலில் தோற்றுவிடுவதாலேயே கழகத்தை காமராசர் அடக்கி அழித்துவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டிருக்கிறது, அந்த ஏடு! இதற்கே இப்படிச் சித்திரம் வரைந்த அந்த ஏடு சென்னை நகராட்சித் தேர்தலிலே காங்கிரஸ் படு தோல்வி அடைந்தபோது எப்படிச் சித்திரம்போட்டிருக்குமோ தெரியவில்லை!

காங்கிரஸ் எப்படிக் கழகத்தைத் தோற்கடித்தது? இன்னும் நன்றாகச் சொல்ல வேண்டுமானால், காங்கிரஸ் எப்படி வெற்றி தேடிக்கொண்டது? இதை நாட்டு மக்கள் அறியாதவர்களல்லர்.

வெள்ளிப் பணம் தூக்கம் கலைத்து இரும்புப் பெட்டியிலிருந்து இறங்கி, சேரிகளிலும். ஊர் ஓரங்களிலும் வாழும் ஓட்டர்களின் மடியில் இரவோடு இரவே 'பலாத்காரமாக' ஏறி அமர்ந்து கொண்டது!

பதவியிலிருப்போர், அதிகாரக் கோல் பிடித்தோர் ஆள் மயங்கும் வேளையிலே முக்காடு போட்டு வந்து ஏழை மக்களை உருட்டி மிரட்டினார்கள்!

சாம, பேத, தான, தண்டம்—ஆகிய நான்கு உபாயங்களுமே காங்கிரஸ்காரர்களுக்கு அபயமளித்த கருவிகளாகும்!

பல்லைக்காட்டுவார்கள்; பசப்பு மொழி பேசுவார்கள்; மிரட்டிப் பார்ப்பார்கள்; ஊரைவிட்டு விரட்டுவேன் என்பார்கள்; 'ஐந்துக்குப் பத்தாக வாங்கிக்கொள்' என்பார்கள்; இத்தனைக்கும் படியாவிட்டால் அடிதடிக் கலகத்தில் இறங்குவார்கள்.

இத்தகு திருவிளையாடல்களைப் புரிந்துதான் சிதம்பரத்துத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி மாலையைப்பிடிங்கிக்கொண்டது!

நேர்மையை முன்நிறுத்தி அவர்கள் ஓட்டு பெற்றிருந்தால், வாய்மையைக் காட்டி அவர்கள் வாக்குகளை அடைந்திருந்தால் காங்கிரசின் கண்ணியமான வெற்றி—என்பதை நாமும் ஒப்புக்கொண்டிருப்போம்.

—ஜனநாயகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாமல் வறுமை குறுக்கே நிற்பதால் ஏழை மக்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக உயிருக்கும் மேலான வாக்கை விற்கவேண்டி நேரிட்டுவிட்டது!

"ஒரு ஸ்தாபனத்திற்கு எவ்வளவு வயதாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது நவயௌவனத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும், மங்கா இளமையுடனும் இருக்கும்"

—இப்படி எழுதுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள், ஆனால் காங்கிரசு என்னும் கிழவனுக்கு இருக்கும் நவயௌவனம் ஜனநாயக நங்கை கற்பை அழிப்பதற்குத்தான் பயன்படுகிறது; அவனுக்குள்ள பொறுப்புணர்ச்சி புதிதாக 'நோட்டு'களைக் கொடுப்பதற்கும், அப்படிக் கொடுப்பதன்மூலம் காங்கிரஸ் கட்சிக்கென்று தேர்தல் செலவுக்காகப் பணம் பெறுவதற்கும் தான் பயன்படுத்தப்படுகிறது.

—காங்கிரசைக் காக்கப் புறப்பட்டிருக்கும் இந்தப் புதிய வக்கீல்கள் இந்த மாபெரும் உண்மையை மறைக்க முயல்வது வேடிக்கைதான்!

காங்கிரசின் சிதம்பரத்து வெற்றி, வரம்பு மீறிப் பெற்ற வெற்றி; மனிதத்தன்மை செத்த பிறகு பெற்ற வெற்றி; ஜனநாயகம் வெட்கித் தலை குனிந்தபோது பெற்ற வெற்றி!

இதையறியாது கேலிச் சித்திரத்தில் இறங்கிவிட்டார், பத்திரிக்கையாசிரியர்! அவருக்கு இன்னும் தெளிவுரை வேண்டுமென்றால் அவரது பாணியிலேயே பதிலளிக்கிறோம்.

நடராசர், பத்திரிகையாசிரியர் குறிப்பதுபோல் ஆனந்தத் தாண்டவம் மட்டுமே ஆடுவபவரல்லர். அவருடைய புகழ் உயர்ந்த ஊர்த்தவ தாண்டவத்தைப் பற்றி பத்திரிகையாசிரியரும் சித்திரக்காரரும் கேள்விப்பட்டிருப்பார்களோ என்னவோ நாம் அறியோம். அந்த ஊர்த்தவ தாண்டவம் எப்போது ஆடிக் காட்டினார் என்பதற்கு ஒரு புராணக் கதை உண்டு.

'கங்கை'யைத் தலை மேல் வைத்திருக்கும் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் நடனத்தில் போட்டி வந்துவிடுகிறது. எல்லா வகை நடனத்திலும் பார்வதி வெல்கிறாள்; வெற்றியின் விளிம்பிலே அவள் நிற்கிறாள். பார்வதி வெற்றியடையக் கூடாதே என்பதற்காக சிவன் ஊர்த்தவ தாண்டவம் ஆடுகிறார். அப்படி ஆடும்போது ஒரு காலை தலை வரைக்கும் உயர்த்திக்கொண்டு நடனமிடுகிறார். அந்த ஆபாச நடனத்தைக் கண்ணால் கண்ட பார்வதி பெண்ணாதலால் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப் படாது நாணம் கொள்கிறாள்; வெட்கிக் கைகளால் முகத்தை மறைத்துக் கொள்கிறாள்! அடுத்து அவள் ஆட முடியாததால் சிவன் வெற்றி கொள்கிறார்.

அதே வெற்றியைத்தான் சிதம்பரத்தில் காமராசரும் பெற்றார். ஜனநாயகம் எனும் பெண் வெட்கித் தலை குனியும்படி ஆபாசக் கூத்தாடினார்; அநியாய வெற்றி பெற்றார்! இதைத்தான் பக்கத்திலுள்ள படம் விளக்குகிறது! இப்போது அந்தப் பத்திரிகையாளர் தெளிவடைந்திருப்பார்—என்றும் அடுத்துவரும் அவரது பத்திரிக்கையில் இந்தப் படத்தை வெளியிட்டு தம்முடைய நன்றியுணர்வைக் காட்டிக் கொள்வார்—என்று நம்புகிறோம்.

மேனி அழுகிப்போய் நாற்றமெடுத்து ஆற்றில் மிதந்துவரும் காங்கிரஸ் சவத்திற்கு உயிர் கொடுக்க அந்தப் பத்திரிகாசிரியர் என்னதான் 'பகீரத'ப்பிரயத்தனம் செய்தாலும் பயன்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரோமாபுரிப்...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

கரிகாலன். அவ்விருவரும் போட்டி போட்டுக் கொண்டு அழுது முடித்தபிறகு முத்துநகை கரிகாலனிடம் கேட்டாள், "நான் போய் வீரபாண்டியைப் பார்த்துவிட்டு வருகிறேன்." என்று!

"அப்படியொரு ஒற்றன் பாண்டிய நாட்டில் இல்லையென்று நான் விசாரித்த வரையில் தெரிகிறது." என்று சோழன் பதில் கூறினான்.

"பாண்டிய மன்னரால் நியமிக்கப்பட்டவர்தான் அந்த ஒற்றர். தாங்கள் கேட்டவைகள் தவறானவைகளாக இருக்கக்கூடும். வீரபாண்டியைப்பற்றி வீண் சந்தேகம் ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை. அவருக்கு என்ன ஆயிற்று என்றும் தெரியவில்லை. அவரை நான் உயிரோடு பார்க்கப் போகிறேனா என்பதே சந்தேகந்தான்" என்று கூறிவிட்டு மீண்டும் அழ ஆரம்பித்தாள் அவள்.

வேதனைக் களத்தில் வீழ்ந்து கிடக்கும் அவளுக்கு மேலும் துன்பம் தர எண்ணாமல் அரசன், அவளைப் போகுமாறு கூறிவிட்டுத் துணைக்குச் சில வீரர்களையும் அழைத்துச் செல்லுமாறு கூறினான்.

"இல்லை! யாரும் தேவையில்லை. நான் தனியாகவே போய் வருகிறேன்" — எனச் சொல்லிவிட்டுக் கரிகாலனிடம் விடைபெற்று முத்துநகை, வீரபாண்டியைச் சந்திக்கப் புறப்பட்டுவிட்டாள். அரசரைக் கொல்ல வந்த இருங்கோவேளின் ஆள்கூறிய தகவலிலிருந்து தன் காதலன் உயிரோடு இருப்பான் என்ற நம்பிக்கையே அவளுக்கு இல்லை. அந்தச் சூழ்நிலையில் அவள் மனம் என்ன பாடுபடும்? பாழ் மண்டபத்தினருகிலோ, அல்லது அந்தக் குளத்திலோ தன் ஆசைக் காதலனின் பிணம் கிடக்கும் — அய்யோ! அதைப் பார்த்த பிறகு உயிர் நிற்குமா உடலில்! அப்படிப்பட்ட ஒரு கொடுமையான காட்சிதான் தன்னை வரவேற்கக் காத்திருக்கிறதா? அல்லது மரணத்தோடு போராடிக் கொண்டு ஆதரிக்க யாருமில்லாமல் அவதிப்படுகிற வீரபாண்டியைத்தான் அவள் காணப்போகிறாளா? அப்படியானால் காயம்பட்டு அலறித் துடிக்கும் அவனைத் தழுவி சிகிச்சை செய்து உயிர் கொடுத்து விட்டு மறு வேலை பார்க்கலாம் அவள்.

எண்ணங்கள் உந்தித்தள்ள ஓடிக் கொண்டிருந்தாள் பாழ் மண்டபம் நோக்கி.

தொடரும்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணநிதி, 'முரசொலி' அச்சகம் 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு